LC
N17.3
178915

T.D.R.C. 21

ஓம்.

# PANCHARATHNAM

# பஞ்சரத்னம்.

இரண்டாம்பாகம்.

46/3.17

24 SEP 191




| | | | |
|---|---|---|---|
| | ர்மோபதேசம் | 7 | ஜீவசரித்திரம் |
| | டபிள்லயன்ஸ் | 8 | ஜால வேடிக்கைகள் |
| | சாக ஓட்டும் விதம் | 9 | 8:வியாதிகளுக்குமருந்து |
| | திவிரதைகளின் குணம் | 10 | அத்திமரத்தின் குணம் |
| | சுவரப்பிரூர்த்தனை | 11 | விஷகடி மந்திரம் |
| | ாடிக்ஞானம் | 12 | மெஸ்மெரிசம் கண்ணாடி |


எம். ஜே. ஷர்மா அவர்கள்,

இயற்றியது.

ரை, அஷ்டலக்ஷிமிவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy right.

1917. [விலை 8-அணா.

C

17.2

8915

—ஓம்—

## முகவுரை.

"சோமகிர்பிஷ்டவா வயம் வர்தயாமோ வசோவித:
ஸுமம் நளீகோன ஆவிஷா"

(ரிக்வேதம் அஷ்டக் 1. அத்தி 6 வர்க் 21. மந்திரம்
(ஆர்யாபிவினயம் 36)

ஹே! சோமா! ஸர்வ ஜகத்தையும் உற்பத்தி செய்… ங்களுக்கு சாஸ்திரப்படி பூஜை செய்கிறேன். நீங்கள் …ருக்கும் பெரியவர் ஆதலினால் சுகம் கொடுங்கள் அவித்ய… ற இருட்டைப்போய் வித்யா என்ற சூரியனை பிரகாசிக்கச் செய்து …களை ஆனந்தப்படுத்தவேணும். (மகரிஷி ஸ்வாமி தயானந்த …வதி பாஷ்யம்)

இந்தச் சிறுபுஸ்தகத்தில் அநேக விஷயங்களைப் … எழுதியிருக்கிறேன். அவைகளையெல்லாம் ஒவ்வொருவரும் …வலாம். இதில் அநேக வியாதிகளுக்கு மருந்து செய்யும் … சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தப்படி செய்து சாப்பிட்… சுகம் தரும். அவைகள் குணப்படுத்துமேயொழிய ஒருபோ… கெடுதல் செய்யாது.

முதலில் நம் இந்தியர்களுக்கு உபதேசம் செய்யவேண்… ருப்பது அவசியமாகையால், முதலில் தர்மோபதேசம் சொல்… பட்டு இருக்கிறது. பிறகு ஒவ்வொருவிஷயமாக பூரணமாக … தரிக்கப்பட்டுஇருக்கிறது. இது மிகவும் முக்கியமான புஸ்… மென்று நினைத்து இதன்பிரகாரம் செய்வீர்களாயின் அ… எனக்கு சந்தோஷத்தைக்கொடுக்கும். தர்மாத்மாக்கள் ப… ளுதவிசெய்தால் எல்லாருக்கும் இதை இனமாககொடுக்கலாம்.

இந்தப்புஸ்தகத்தை எனக்காக தமிழில் மொழிபெயர்… இந்தப் புஸ்தகத்தை அச்சுக்குக்கொண்டு வரும்படி செய்த … சிநேகிதர்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறே…

M. J. Sharma Madura.

(இப்புத்தகத்தி… ஸர்வாதிகாரம் எமக்கே)

M. J SHARMA & CO MADURA
எம் ஜே ஷர்மா அண்டு கோ மதுரை,

1146 3/1
…THE REGISTR… 24 SEP 1917 MADRAS

ஓம்.

# பஞ்சரத்னம்.

## இரண்டாவது பாகம்.

சிஷ்யன்:—குருவே முதல்பாகத்தில் 30-வது பக்கத்தில் அடுத்த பாகத்தில் தர்மஉபதேசம் சொல்வதாக சொன்னீர்களே இப்பொழுது தயவு செய்து சொல்லுங்கள்.

குரு:—நான் சொல்லுகிறேன் கவனமாய்க்கேள். இந்தசரீரத்தை விட்டுவிடவேண்டும் என்? (சாணக்யநீதி 12-வது அத்யாயம் 4-வது சுலோகம்.)

"எந்த கை தானம் செய்யவில்லையோ, எந்தக்காதுவே தாதிசாஸ்திரங்களை கேட்கவில்லையோ எந்தக்கண்களானது மகான்களை தரிசனம் செய்யவில்லையோ, எந்தக்கால்களானது நல்ல இடங்களுக்குபோகவில்லையோ இவைகளும், எவன்பொய்சொல்லுதல், கபடம், முதலியவைகளால் திரவியத்தை சம்பாதித்து தனக்கு நிகர் ஒருவருமில்லையென்று கர்வங்கொண்டு இருக்கிறானோ அவனும் இருப்பதினால் என்னபிரயோஜனம்?" மேல்கண்ட சுலோகம் எவ்வளவு நீதி கற்பிக்கின்றது? சரீரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று வேதாதிசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்த சரீரம் நம்முடையதல்லவென்பது சத்யம். ஈசுவரன் இந்தசரீரத்தை எதற்காக கொடுத்திருக்கிறார்? எப்பேர்ப்பட்ட சரீரத்தை கொடுத்து இருக்கிறார் என்பதை ஆராய்வோம். பரமாத்மா நமக்கு சுத்தமான சரீரத்தை கொடுத்திருக்கிறார். எதற்காகவெனில் சத்கர்மங்களை செய்வதற்காகவே

கஷ்டநிவாரண சூரியமாத்திரை 27-வியாதிகளைக் கண்டிக்கும் ஆச்சரியமான மாத்திரை:—42 மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு ரூ 2-4-0 மற்றவிபரங்கள் பிட் கோட்டீசில் காணலாம்.
N. B:—ஏஜண்டுகள் தேவை.

178915



அதை நாம் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டியது. நம்முடைய கடமை. பாபகர்மங்களைசெய்து நாம்சரீரத்தை அசுத்திசெய்யக்கூடாது. அப்படிசெய்வதினால் பாபம் சம்பவிக்கும். அப்படி பாபம்சம்பவிப்பதினால் ஈசுவரனுடைய கிருபைக்கு பாத்ரமற்றவர்களாக ஆகிவிடுவோம்.

ஸ்நாநம் செய்வதினால் வெளிக்கு சுத்தியாகின்றது. அதுபோல் உள்ளும் சுத்தமாவற்கு என்னசெய்யவேண்டும்? நமது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் நம்முடைய சரீர அந்தரங்க சுத்திசெய்துகொள்ள உதவி செய்யவேண்டும்.

முதலில் கையை எடுத்துக்கொள்வோம். கையை சுத்தமாய் வைத்துக்கொள்ள சோப்பு, மண் முதலியவைகளைபோட்டு தேய்த்து கழுவினால்மாத்திரம் போதாது. அப்படிச்செய்வதினால் பகிர் சுத்திதான் உண்டாகும். அந்தசரீரசுத்தி உண்டாக என்னசெய்யவேண்டும்? தான தர்மங்களைச்செய்யவேண்டும். ஏனென்றால், இந்த ஜகத்தில் நானாவிதமான மனுஷ்யர்கள் இருக்கிறார்கள். சிலர் அன்னியர்களுடைய சஹாயத்தை எதிர்பார்க்காமல் தாங்களே சம்பாதித்து ஜீவனம்செய்ய சக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிலர் அன்னியர்களுடைய ஸஹாயத்தை நாடுகின்றார்கள். அவர்கள் யார்? காலில்லாதவர்கள், கையில்லாதவர்கள், கண்ணில்லாதவர்சள், குஷ்டரோகிகள், செவிடர்கள் முதலியஅங்கஹீனர்கள். இவர்களை சம்ரக்ஷிக்கும்பொருட்டு தானம் செய்யவேண்டும். அப்படி இவர்களுக்கு தானம்செய்வதினால் மனுஷ்யன் அவர்களிடமிருந்து பிரதி பிரயோஜனத்தை அபேக்ஷிக்காதவனாக ஆகி மோக்ஷத்திற்கு பாத்ரனாகின்றான். ஏனெனில் பிரதிப்பிரயோஜனத்தை அபேக்ஷித்து ஒருவருக்குதானம்செய்தால் அது தானமாகமாட்டாது. இவர்களுக்கு தானம் கொடுத்து ரக்ஷிக்காவிட்டால் சம்சாரத்தில் ஒருவருக்குஒருவர் பரஸ்பரபிரியம்ஏற்படாது. மேலும், அங்கஹீனர்களை ரக்ஷிப்பது முக்யதர்மம். அவர்களுக்குதானத்தின்மூலமாகரக்ஷணம் ஏற்பட வேண்டும். ஏனென்றால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது

சகலதோஷ நிவாரணம் ஜெபம் செய்த வெள்ளித் தாயத்து 0—12—
N. B:— ஏஜண்டுகள் தேவை.



17895

யார் தானம் செய்கிறார்களோ அவர்களுக்குகீர்த்திஉண்டாகிறது; தானம் செய்யாதவர்களுக்குகீர்த்திகிடையாது. கர்த்தாவுக்கு கீர்த்திஏர்படுவதோடு கூடதானம் செய்வதனால் அநேககார்யங்கள் விருத்தியடைகின்றன. உதாரணமாக சாலைகளில் கிணறுகுளம் வெட்டுதல் சத்திரம் பாடசாலை கலாசாலை முதலியவை ஏற்படுத்துதல் முதலியவை கர்த்தாவுக்கு அழியாதகீர்த்தியை கொடுப்பதோடுகூட பொதுஜனங்களுக்கும் சௌகர்யமாகயிருக்கின்றது. ஆகையால் தானம் எவ்வளவு அவசியமானது என்பது மேல் கண்டவைகளால் விளங்கும்.

## கடவுள் கொடுத்த தானம்.

ஈசுவரன் அவருடையகார்யங்களின் மூலமாகநமக்குதான் உபதேசம் செய்கிறார். அவர் நமக்கு விலையற்ற அநேகவஸ்துக்களை கொடுத்து இருக்கிறார். அவைகள்யாவை? காற்றுஜலம் பூமி அக்கினி நம்மிடமிருந்து அவர் பிரயோஜனத்தை எதிர் பார்க்காமலே இப்பேர்ப்பட்டவிலையுயர்ந்த வஸ்துக்களைகொடுத்துஇருக்கிறார். அந்தவஸ்துக்களை நாம் உபயோகப்படுத்திக் கொள்கிறோம். நாமும் பரமாத்மாவைப்போல தானம்செய்யவேண்டாமா? அவ்விதம் தானம் செய்வதினால் நாம் பரமாத்மாவின் ஸத்புத்ரர்களாகின்றோம். அவருக்கு நம்மேல் பிரியம் உண்டாகின்றது. சரீரத்துக்கு தங்கக்காப்புமுதலியஆபரணங்கள் அணிவதினால் சோபை உண்டாவதில்லை. தானம்செய்வதினால்தான் சரீரத்திற்கு சோபைஏற்படுகின்றது. அப்படிஉண்டாகும் சோபையானது எப்பொழுதும் அழியாமல் ஆத்மாவை அனுசரிக்கின்றது.

## தானம் இரண்டுவகைப்படும் அவை யாவன

1 உண்மையான தானம் அதாவதுஅந்தரங்க பத்தியோடும் சிரத்தையோடும் கொடுப்பது (2) பொய்தானம். அதாவது அன்னியர்கள் தங்களை புகழவேண்டு மென்றும் இன்னு வேறுவிதமான கபடஎண்ணங்களைக்கொண்டுசெய்யும் தானம். இவைகளை இங்கு விஸ்தாரமாகச் சொல்லயிடமில்லை. வேறொரு புத்தகத்தில்

பஞ்சரத்ன பல்பொடி டப்பி 1க்கு விலை அணா 0—4—0
தலைவலி மருந்து விலை அணா 0—4—0.
N. B:— ஏஜண்டுகள் தேவை.

சொல்லுகிறோம். தானம் மனுஷ்யர்களுக்கு அவசியம் வேண்டும். அரிச்சந்திரன் சிபி. பலிசக்ரவர்த்தி கர்ணன், ஹாதம் தாயி ஹூதா தோஸ்து இவர்களின் கீர்த்தியும், பெயரும், அவர்கள் இறந்து அநேக வருஷங்களாயினும் இன்னும் ஜீவித்துக் கொண்டிருப்பது அவர்கள் செய்த தானத்தினாலன்றோ? ஆகையால் மேல் சொல்லியவைகளால் கைக்கு சுத்தி தானத்தினால் எற்படுகின்றதென்றும் தானத்தினாலேயே இந்த ஸம்சாரம் நிலை நிற்கிறதென்றும் நன்கு விளங்கும்.

காது எப்படி சுத்தமடைகின்றது? வேதாதி சாஸ்திரங்களின் சிரவணத்தினால் காதுக்கு சுத்தமுண்டாகின்றது. காதினுடையதர்மம் என்ன? கேட்பதுதான், காது கெட்ட வார்த்தைகளையும் நல்லவார்த்தைகளையும் அசம்பாவிதமான பேச்சுகளையும் கெட்டபாட்டுகள்முதலியவைகளையும்கேழ்ப்பதில் உபயோகப்படுத்தப்படுகின்றது. இந்தக்காதை ஈஸ்வரன் எந்தவார்த்தைகளைக் கேழ்க்க நமக்கு கொடுத்துஇருக்கிறார் என்று நாம்யோசிக்க வேண்டும். இந்தகாதினால்பரமாத்வாவினுடைய வார்த்தைகளாகிய வேதாதிசாஸ்திரங்களையும். ஞானத்தையும் நீதியையும்தர்மத்தையும்போதிக்கக்கூடியசத்கதைகளாகியபுராணங்களையும் கேட்கவேண்டும். வேதத்தில்பரமாத்மாநமக்குஉபதேசத்தையும் ஆக்ஞையும் சொல்லியிருக்கிறார். விலையற்ற வேதாதி சாஸ்திரங்களையும் புராணங்களையும் படிப்பதைவிட்டு சில்லறை புஸ்தகங்களாகிய தெம்மாங்கு முதலியபாட்டுகளையும் இன்னும் அநேகவிதமாகிய கெட்டபுஸ்தகங்களையும் வாசிப்பது என்ன அறிவீனம். நாம்காதை சரியானபடி உபயோகப்படுத்தாவிட்டால் அசுத்தமடைகின்றது. அதனின்றும் பயம் உண்டாகின்றது அதனால் நம்முடைய ஜன்மாவீணாய் விடுகின்றது. ஆகையால்சரீரத்தின் இரண்டாவது பாகமாகியகாதை சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்

நேத்ரம்:—கண்களின் கார்யம் என்ன? பார்க்கிறதுதான் நல்லது கெடுதல் இரண்டு விதமான வஸ்துக்களையும் பார்க்கி

பஞ்சரத்ன பல்ப்பொடி டப்பி 1-க்கு விலை அணா 4 தலைவலி மருந்து விலை அணா 4. ஆரியமாத்திரை சாப்பிட்டால் சுகத்தைத்தரும்.
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



ன்றது. நல்லவஸ்துக்களைப்பார்ப்பதினால்நம்முடையஆத்மாவுக்கு ஹிதகரமாயிருக்கிறது நேத்ரமும் நல்லவழியில் உபயோகப் படுத்தப்படுவதனால் சுத்தமுள்ளதாக ஆகிறது. அனுசிதமான வஸ்துக்களைபார்ப்பதனால் நேத்ரம் நஷ்டமடைகின்றது. அதாவது அசுத்தமடைகிறது மகாத்மாக்களின் தரிசனத்தால் மனுஷ்யன் சுத்தமாக ஆகிறான். ஒருவிதமான தேஜசும் ஞானமும் உண்டாகின்றது இது மகாத்மாக்களின் தரிசனம் ஏற்பட்டவர்களுக்குதான் தெரியும் உதாரணத்தால் நிரூபிக்ககூடியதில்லை மகான்களுடைய முகத்தில் ஆகர்ஷணசக்தியிருக்கின்றது. அது அன்னியர்களின் மனதை அம்மகாத்மாக்களிடத்தில் இழுக்கின்றது. அப்படி ஆகர்ஷிக்கப்பட்டவர்கள் சுத்தியடைகின்றார்கள். இதுசத்யம் இப்பேர்ப்பட்ட சுத்தி சுத்திபண்ணும் தன்மையை நாம் அவசியம் கிரஹிக்கவேண்டும்.

கால்:——காலின் தர்மம் நடப்பதுதான். கால்கள்பலஇடங்களுக்கு போகின்றன கெட்ட இடங்களுக்கு போவதனால் கால்கள் அசுத்தமடைகின்றன நல்லஇடங்களுக்கு போவதனால் கால்களுக்குபலமும் சுத்தியும்ஏற்படுகின்றது ஆத்மாவும் சுத்தமடைகின்றது நாம்போகும் இடங்களின்குணதோஷங்கள் வெவ்வேறு அந்தஇடங்கள் போலவே ஆத்மா சுத்தமாகவோ அசுத்தமாகவோ ஆகின்றது தர்மரக்ஷணார்த்தம் அநேகமகான்கள் தங்கள் பிராணனை விட்டு இருக்கிறார்கள் அவர்களின் சமாதியைப் போய்ப் பார்ப்பதினால் மனதுக்கு ஒருவிதமான உற்சாகமும் தர்மத்தில் ஊக்கமும் உண்டாகிறது. உதாரணமாக தர்மபீர் ஹக்கிகத்ராய் முதலியவர்கள் சமாதியைப் போய் தரிசனம் செய்தால் நமக்கு தர்மத்தில் ஊக்கம் வருகின்றது. மதுராவுக்குபோய் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா பசுக்களைமேய்க்கும் ஐதீகத்தைப் பார்த்தால் நமக்கு பசுக்களிடத்தில் ஒருவித பக்தியுண்டாகின்றது. கதைகள்மு[illegible] கேழ்ப்பதைவிட நாம்அந்தஇடத்திற்குப் போய்ப்பார்த்தால் இன்னும் ஆநந்தம் ஜாஸ்தியாகின்றது ஆகையால் நாம் இந்த காலை நல்லஇடங்களுக்குப் போக உபயோகிக்க வேண்டும்.

சுதா பாதக் சூரணம் விலை அணா 4. ஆரியமாத்திரை சாப்பிட்டால் சுகத்தைத்தரும். N.B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

வயிறு:——வயிற்றின் வேலை சாப்பிடுவது தான். வயிறு
நாநா விதமான வஸ்துக்களை சாப்பிடுகிறது எந்த .வஸ்துக்களை
கொண்டு இந்த வயிற்றை திருப்தி செய்வதென்று நாமயோஜி
கவேண்டும். நல்லவஸ்துக்களாகிய அன்னம் பழம். அல்வா. பாய
ஸம், முதலிய பக்ஷணங்களை உட்க் கொண்டால் சரீரத்திற்கு
சுத்தமும் திடமும், தேஜசும், ஆரோக்யமும் உண்டாகின்றது
கெட்டபதார்த்தங்களாகிய, மாமிசம் கஞ்சா, அபின் சாராய
முதலியவைகளை உட்க்கொள்வதினால் சரீரத்திற்கு அசுத்தமும
வியாதியும், புத்திக்குரைவும் முதலிய கெடுதல்களும் உண்டா
கின்றன. நாம் புசிக்கும் ஆகாரவஸ்துக்கள் தர்மத்தினாலும்
அதர்மத்தினாலும் உண்டாகின்றன. தார்மிகர்களுக்குஇந்த ஸ
சாரம் நல்லபலன் கொடுக்கிறது. அவர்கள்மேல் எல்லோ
ரும் பிரியமாக இருக்கிறார்கள். எல்லோரும் அவர்களைப் பூஜி
கிறார்கள். நியாயமான விஷயத்தில் பணம் சம்பாதித்
நாம் ஜீவனம் செய்யவேண்டும். அதர்மத்தினால் சம்பாதிக்க
பட்ட தனம் நமக்கு உதவாது. லஞ்சம் முதலானதுகள்வாங்
ஏராளமான திரவியம் சம்பாதித்து வைத்திருப்பவர்களி
திரவியமெல்லாம் சீக்கிரம் அழிந்துபோவதையும் பின்பு அவர்
பச்சாத்தாபமடைவதையும் பார்த்து இருக்கிறோம். ஆகைய
நாம் நல்ல வழியில் பணம் சம்பாதித்து ஜீவனம் செய்யவேண்

சிரசு:——நிமிர்ந்தும், தாழ்ந்தும், இருக்கின்றது, நிமிர்ந்து
ருப்பதினால் லாபமில்லை. காற்று பலமாக அடிக்கும்போது
நேரே நிமிர்ந்து நிற்கிறமரம் அடியோடு விழுந்துவிடுகிற
வளைந்துள்ள மரம் காற்றினால் யாதொருவிதமான கெடுதலை
அடைவதில்லை யார் ஒருவர்வணக்கமாயும் மரியாதையாயும்
க்கிறார்களோ அவர்களோடு ஒருவரும் சண்டை சச்சரவு செ
மாட்டார்கள் கொவத்தினால் தலைகொழுத்து முண்டாத
கொண்டு எனக்கு எதிர் ஒருவருமில்லை என்றுயார் இருக்
களோ அவர்களின் திமிரையடக்க யாவராயினு. ெ
வர் வந்து அவர்கள் கர்வத்தையும் மண்டைக்கொழு

வயிற்றுவலி சூரணம் அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை அணா 4
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



ம் குலைத்துவிடுவார்கள். கர்வ ஒருதீக்ஷண்யமானகத்தி போன்
து அதினால அனேகர் பிராணனை விட்டிருக்கிறார்கள். உதாரண
தாக ராவணனும், துர்யோதனனும், ஹிரண்யனும், தங்களுடைய
கர்வத்தினாலேயேபிராணனை விட்டார்கள் கர்வமுள்ளவர்களுக்கு
வசியம் ஹானிவரும். ஆகையால் கர்வமில்லாமல் நாம் தாழ்ந்து
வணக்கத்துடன் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் க்யாதி
உண்டாகும் மகாத்மா சாணக்யர் என்னசொல்லுகிறார்? எக்சரீத
த்திற்கு சர்வாங்கம்சுத்திஇருக்கிறதோ அதுதான் சரீரம். மற்
றது மண்ணிற்கு சமானம்.

ஆகையால் நாம் பரமாத்மாவை எல்லாசரீரமும் அங்கங்க
ளும்பிரத்யங்கங்களும் போற்சுத்தமாக இருக்கவேண்டும் என்று
எல்லாபிராணிகளின் மேல் சத்தியமும் தர்மமும் ஓங்கிநிற்கவே
ண்டுமென்றும் பிரார்த்தனை செய்வோம் (ஆர்யமித்திரன்
ம-1-17) சிஷ்யன்:—சுவாமி தெரிந்துகொண்டேன். தர்மஉப
தேசம் இதோடு முடிந்துவிட்டதா அல்லது இன்னம் இருக்கிறதா
குரு;—தர்மஉபதேசம் கொஞ்சமா அதற்கு எல்லை இல்லை.
இன்னமொரு சமயம் கேள் அப்பொழுதுசொல்லுகிறேன்.

சிஷ்யன்—குருவேதாங்கள் எனக்கு பஞ்சரத்தினத்தின்
முதலாவது பாகத்தில்மெஸ்மரிசம் அப்யாசம்பூர்ணமாகசொல்லி
விட்டீர்கள். மேஜயின்பேரில் ஜீவாத்மா கூப்பிடும்வகைசொல்லு
கிறேன் என்று 25-பக்கத்தில் 21-வது வரியில் சொன்னீர்கள்
அதை இப்போது தயவுசெய்து சொல்லுமாறு வேண்டுகிறேன்.

குரு:—சிஷ்யா! எனக்கு என்ஸ்வாமி எப்படி அப்யாசம்
பண்ணவேண்டும் என்றுசொன்னாரோ அப்படியே நான் உனக்கு
இப்பொழுது சொல்லுகிறேன் கவனமாய்க்கேள்.

(Table Sciuce டேபிள் ஸயின்ஸ்.)

மேஜயின்பேரில் ஜீவாத்மாவரும் விதம்;—

மேல்சொன்னதும் மெஸ்மரிசம் சம்பந்தப்பட்டது. நான்
துதற்காகடேபில் ஸயின்ஸ் மாத்திரம் சொல்லுகிறேன். முதலில்
நிகவும் ஆசாரமாய் இருக்கிரவர்கள் சேர்ந்து இதைக்கற்றுக்கொ

மலசுத்தி மாத்திரை விலை அணா 0—12—0.
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

ள்ளவேண்டுமென்று ஆசைப்படவேண்டும் முதலில் மூரத்தால் ஒரு ரவுண்டு மேஜை தயார்செய்யவேண்டும் அதற்கு 3-கால்கள் இருக்கவேண்டும். பிரயோகம் செய்ய மேல்சொன்ன மேஜை அவசியம். முதல்பாகத்தில் கூறியபடி ஏகாந்த இடம் வேண்டும். மனக்கபடமில்லாமல் இருக்கவேண்டும் நிரம்ப சுத்தமாய் இருக்கவேண்டும். இந்தப்பிரயோகத்தில் முன்பாகத்தில் கூறியவற்றை மனதில் ஞாபகம் வைத்துக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும். டேபிள் ஸயின்ஸ் செயயப்பட்ட சபையில் ஒருவர் சித்தி அடைந்தவர் மற்றவர்கள் சபையோர்கள்.

(ப்ரயோகம்) (அப்பாசம்)

ஒருசுத்த வாசனைகளோடுகூடிய தனி அறையில் மேற்சொன்ன மேஜையின் சயின்ஸ் கற்கப்பிரியமுள்ளவர்கள் நாலு பக்கங்களிலும் உட்கார்ந்து ஒவ்வொருவரும் தங்கள் இருகைகளையும் சேர்த்து மேஜையின்பேரில் வைக்கவேண்டும். ஒருவருடைய கைகள் மற்றவர்களுடைய கைகளோடுகூடி இருக்கவேண்டும் ஒட்டி இருக்கவேண்டும் கைகள் ஒன்றுக்கொன்று ஒட்டாவிட்டால்ப்ரயோகம் சித்திக்காது(சித்தி)சபையின் மத்தியிலும் உட்காரலாம் தனியாயும் உட்காரலாம் தனியாய் உட்கார்ந்தால் மிகவும் நலம். அவர்கள் எந்த ஜீவாத்மாவைக் கொண்டுவரவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை நினைத்து ஈஸ்வரனைத்யானம் செய்ய வேண்டும் (பஞ்சம காயக்பவிதி 39 பக்கம்) அரை மணிநேரம் கழித்து(சித்தி) மேஜையை கிமிர்ந்து பார்த்து இந்த மேஜையில் ஜீவாத்மா வந்திருந்தால் அதன் ஒருகால் தூக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும் கால்தூக்காவிட்டால் மறுபடியும் ஈஸ்வரனைத்யானம் பண்ணவேண்டும் (15நிமிஷம்) பிறகுமுன் போல் சித்திசொல்லவேண்டும். இப்பொழுதும் கால் கிளம்பாவிட்டால் அப்யாசம் அன்று விட்டுவிடவேண்டும் இரண்டாவது நாள் அதேநேரத்தில் மறுபடியும் செய்ய வேண்டும். இப்படி 6 தினங்கள் செய்ய வேண்டும். இப்படிச் செய்து 7வது தினம் கால் கட்டாயம் தூக்கும் சர்வசக்தியுடைய சர்வகுணசம்

வயிற்றுவலி சூரணம் அரை அவுன்ஸ்புட்டி 1-க்கு விலை அணா 4.
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



பன்னராயுள்ள பரமேஸ்வரர் நாம் சிரமம் எடுத்துக் கொண்டு செய்கிறகார்யத்தை வ்யர்த்தமாக்குகிறதில்லை. அந்தக் கால்த் வாரா மேஜையின்பேரில் ஜீவாத்மா இருக்கிறது என்று சித்திக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. உடனே அதை நமஸ்காரம் செய்து பிறகு அதோடு பேசத் தொடங்க வேண்டும் எந்தபாஷை பேசக்கூடிய ஜீவாத்மா அங்கிருக்கிறதென்று அறிந்து கொண்டு அந்தபாஷையில் கேள்விகள் கேட்கவேண்டும். நாம் எந்த பாஷை பேசும்போது கால் இப்படி தூக்குகிறதோ அந்த பாஷையில் பேசவேண்டும். பிறகு அவாள்பேர் முதலியவை கேட்கவேண்டும். பேர்கேட்கும் விதம் பின்வருமாறு. அந்தபாஷை அக்ஷரங்களை உச்சரிக்கவும். எந்த அக்ஷரம் உச்சரிக்கும் போது கால் எழுந்திருக்கிறதோ அதை ஒருகாகிதத்தில் எழுதவும். இதேமாதிரிமறுபடி மறுபடி உச்சரிக்கவும். இதேமாதிரி, அதன்பேர் ஊர்தெரியும். மனதில் நினைத்த கேள்விக்குவிடைகொடுக்கும். இந்தஅப்யாசத்தைநிதம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் ஜீவாத்மாவுக்குப் பிரியமுண்டாகிறது. மறுபடி கார்யம் ஆரம்பித்தவுடனே டேபிள்மேல் வரும்.

விசேஷ உபதேசம்.

1. இதை தமாஷுக்காக அப்யாசம்செய்யக்கூடாது. 2. இவ்வளவு சபையோர் என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு அவர்கள்தான் எல்லா அப்யாசத்திற்கும் உட்காரவேண்டும். 3. சபையோரை மாற்றக்கூடாது. 4. சபையோர் சிக்கில்லாமலும் சுத்தமாயும் கபடமில்லாமலும் இருக்கவேண்டும். சித்தி எப்பொழுதும் வடபுறம் உட்காரவேண்டும். ஜீவாத்மா சித்திஆய்விட்டபோதிலும் 7 நாளுக்கு ஒரு தினமாவது கட்டாயம் அப்யாசம் செய்யவேண்டும். இதற்குப்பெரிய பெரிய மகாத்மாக்கள் மெஸ்மரிஸ்ட்கள் வேதாந்திகள் சம்மதித்து இருக்கிறார்கள். சிஷ்யன்:— சுவாமி டேபிள் ஸயின்ஸ் ஆனது இத்துடன் முடிந்துவிட்டதா அல்லது இன்னும் ஏதாவது இருக்கிறதா? அதை எனக்கு கொஞ்சம் தயவுசெய்து சொல்லவேண்டும். குரு:—சிஷ்யா இந்த டே

1 வெள்ளை, மஞ்சள், இரத்தஒழுக்கல், உஷ்ணங்களும் 3—8—0
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை,

பிள் ஸயின்ஸ் ஆனது இத்துடன் முடிந்துவிட்டது. ஆனால் மெஸ்மரிசத்தைச்சேர்ந்த மற்றும் அநேகவித ஆச்சர்யகரமான சமாசாரங்களும் வேலைகளும் இருக்கின்றன. அதை நான் அடுத்தபாகத்தில் விபரமாய் சொல்லுகிறேன். சிஷ்யன் :—குருவே எனக்கு தாங்கள் பேய் பிசாசு ஓட்டுவதற்கு மந்திரம் சொல்லுகிறேன் என்று சொன்னீர்களே? அதுசொல்லவில்லையே. ஆகையால் தாங்கள் எனக்கு அதைக்கொஞ்சம் உபதேசிக்கவேண்டும். குரு:—சிஷ்யா நான் தர்மஉபதேசத்தில் சொன்ன ஓம்என்றதுதான் பஞ்சரத்தினம்முதலாவது பாகம்9வதுபக்கம்பார்க்க ஓம்என்றவிஷயம் எம் ஜே ஷர்மாவால் எழுதப்பெற்றஆர்யவைதீகஸந்தியாவந்தனத்தில்விவரித்து சொல்லப்பெற்றிருக்கிறது ) சிஷ்யாபேய்என்பதே கிடையாது, புத்திகொஞ்சம் கெட்டுப்போவதினால் இறுக்குப்பிடிக்கிறது. அந்தபுத்திகெட்டுப்போனதைத்தான்பிசாசுஎன்கிறார்கள். அதை சுத்திசெய்வதற்க்காககாயத்திரி மந்திரத்தை 108தரம் ஓதி அப்பிசாசின்மேலேஊதினால்பேய் என்பதுபோய்விடும். இதேமாதிரி வைசியரும்க்ஷத்திரியரும் செய்யலாம். இதற்கு பூஜைகளாவது, ஆடு, கோழி பலியாவது இதரஜீவ இம்சைகளாவது செய்யவேண்டியதில்லை. இந்த மாதிரி தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (அஹிம்ஸா பரமோ தர்மா.) ஹிம்ஸிக்காமல் இருப்பதே பரமதர்மமாகும். சிஷ்யன் :—குருவே தாங்கள் எனக்கு உலகத்திலுள்ள நான்கு வர்ணங்களில் 3 வர்ணங்களுக்குத்தான் சொல்லி இருக்கிறீர்கள், நான்காவது வர்ணமாகியசூத்திரர்கள்பிசாசு ஓட்டுவதற்கு என்னசெய்யவேண்டும்? குரு :— சிஷ்யா சூத்திரர்களில் பேயிருந்தால் பரமேஸ்வரர் பேரைச் சொல்லி 108-தடவை ஓதினால் பேய் என்பது ஓடிப்போம். சிஷ்யன்;—குருவே நீங்கள் சொன்ன மந்திரத்தைச்சொல்லி அநேகந்தரம் ஓட்டியும் திரும்பிப்பேய் வந்தால் என்னசெய்யவேண்டும் குரு;—சிஷ்யா அதுபேயல்ல பொய்பிசாசு அதற்கு விளக்கமாறு, செருப்பு, தந்திரம், கூடஒரு கலிக்கம் இன்னாலையும் உபயோகப்

2 எல்லாவித வாய்வுகளுக்கும் அதிசீக்கிறத்தில் சொஸ்தப்படுத்தும் படியான ஔஷதங்களுக்கும் 1—8—0

N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை



படுத்தும்வழி ஜனங்கள் என்னைவந்துகேட்கும்போது சொல்லுகிறேன். சிஷ்யன்;—குருவே நான் ஆண்பிள்ளைகளுக்கு1000த்தில் ஒன்று அல்லது இரண்டுபேர்தான் பேய்பிடித்ததாக கேள்விப்பட்டு இருக்கிறேனேயொழிய பார்த்ததில்லையே. ஆனால் பெண்பிள்ளைகளில் 100-த்தில் 99-பேருக்கு பேய்பிடிக்கிறதே ஏன்? இதற்கு என்னகாரணம் தெரியவில்லையே. எனக்கு அதை தயவுசெய்து சொல்லவேண்டும். குரு:— சிஷ்யா பெரிய பெரிய சாஸ்திரங்களில்கூட இக்கேள்விக்கு பதில் காணப்படவில்லை. ஆனால் இக்காலத்தில் என்னுடைய அனுபோகத்தால் பதில் சொல்லுகிறேன். சாஸ்திரம் என்னசொல்லுகிறது என்றால் [ஸ்திரீசரித்திரம் புருஷஸ்யபாக்யம் தேவானஜானன் திருதோமனுஷ்யா] அதாவது ஸ்திரீனுடைய சரித்திரங்கள் புருஷனுடைய விதியே இது தேவர்களுக்குக்கூட தெரியாது. மனுஷ்யர்களுக்கு என்ன தெரியும்? தெரியாது. அதுபோல் சிலஸ்திரீகள் புருஷனைப்பயப்படுத்துவதற்காக பேய்ஆடுகிறார்கள். மற்றும்சிலர் சுத்தமில்லாததால் பேய் ஆடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? வித்தை, புத்தி, உபதேசம் மூன்றுஇல்லை. இதுதான்காரணம். சிஷ்யன்:—குருவே நீங்கள் சொல்லும்பிரகாரம் முன்காலததில் பாரதத்திலாவது ராமாயணத்திலாவது ஸ்திரீகளுக்கு பேய்பிடித்ததாக சொல்லப்படவில்லையே. குரு:—சிஷ்யா! கிடையாது ஏனென்றால் அப்பொழுது எல்லாரும் பதிவிரதைகள். புருஷன் என்கிறதெய்வம் இருக்கிறபோது பேய்வருமா? பதிவ்ரதைகளிட்ட பேய்வரமாட்டாது. அதினால்தான் ராமாயணத்திலாவது பாரதத்திலாவது பதிவ்ரதை ஸ்திரீகளுக்கு பேய்பிடித்ததாகசொல்லவில்லை. சிஷ்யன்:—சுவாமி பதிவ்ரதை என்றால்யார். அவர்களின் தர்மம் என்ன. குரு:—சிஷ்யா சொல்லுகிறேன் கவனமாய் கேள் எந்தஸ்திரியானவள் பதியை சந்தோஷப்படுத்துவதில் ஊக்கமுள்ளவளாகவும், பதியை தெய்வமாகவும் நினைத்து அவனுக்கு ஹிதகரமானவைகளை செய்கிறாளோ அவளே பதிவ்ரதை.

3. கண்சம்மந்தமான பார்வை குறைவு, சாலேஸ்வரம், கண்குடைச்சல், கண்ணில் புரையுண்டாவது, கண்ணில் நோயுண்டாவது இம்மாதிரியான வகையறுக்கள் யாவையும் உடனே சொஸ்தப்படும் 2—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை,

அப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் பதியின் அனுமதியின்றி ஒருகாரியமும் செய்யமாட்டார்கள். புருஷனுக்குப்பிறகு புசித்தலும், புருஷனுக்குப்பிறகு நித்திரைபோதலும், விடியர்க்காலத்தில் புருஷனுக்குமுன் எழுந்து அவனுடைய பாதங்களில் நமஸ்கரித்துவிட்டுத்தான் பின்பு வேறேவேலை செய்யப்புகுவார்கள். தங்கள் கணவனைத்தவிர வேறுஒருவனையும் கண்ணினால்கூடபார்க்கமாட்கள். கணவன் எங்கேயாவது பிரயாணம்போயிருந்தால் அவன் திரும்பிவரும்அளவும் புஷ்பம், ஆபரணம், முதலியவைகளைத்தரிக்கமாட்டார்கள். வெளியில் கோயில் குளம் திருவிழா முதலியவைகளுக்கு போகமாட்டார்கள். எப்போதும் கணவன்மேலேயே மனமுள்ளவர்களாய் அவன் வருகையை எதிர்பார்த்திருப்பார்கள். புருஷன் அங்கஹீனனானாலும் குரூபியானாலும் குஷ்டரோகியானாலும் மனதில் அருவருப்பில்லாமல் அவனுக்கு செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச்செய்வார்கள். அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு இந்த உலகத்தில் கீர்த்தியும் பிறகு மோக்ஷமும் கிடைக்கிறது. உதாணமாக, காந்தாரி, சீதா, சாவித்ரி, நளாயினி தமயந்தி, சுலோசனா. சந்திரமதி இவர்கள்கீர்த்தி யின்னும் இவ்வுலகில் ஜீவித்துக்கொண்டுஇருக்கிறது. சிஷ்யா பதிவ்ரதையின்மகிமையை விளக்க ஓர் கதைசொல்லுகிறேன் கேள். போஜபிரபந்தத்தில் கவி காளிதாசன் நான் சொல்லப்போகும் கதையை சுருக்கிமிகவும்அழகாக ஒருஸ்லோகத்தில் எழுதியிருக்கிறார் அதாவது:

சுதப்பதந்தம் பிரசமீக்ஷபாவகே |
நபோதயாமாஸபதிம் பதிவ்ருதா |
பதிவ்ருதா சாபபயேனபீடிதோ |
ஹுதாஸனஸ் சந்தனபங்குசீதளா |

அதாவது போஜன் ஒருநாள் ராஜ்யத்தை சுற்றிப்பார்க்கப்போனபோது ஓர் அதிசியத்தைப்பார்த்தான். ஒரு வீட்டில் ஒரு பிராமணன் அக்னிஹோத்தரம் செய்துவிட்டு மிகவும் சிரமமாகயிருந்தபடியால் தன் பத்தினியின்மடியின்மேல்தன் தலையைவைத்துப்படுத்து அயர்ந்து நித்திரைபோய்விட்டான் இதுஇப்படியிருக்க பக்கத்தில் தூளியில் போட்டிருந்த அந்த தம்பதிகளின்குழந்தையானது விழித்துக்கொண்டு கீழேவிழுந்து அக்னியில்விழுந்தது. தாயார் பார்த்து ஆகா! இப்பொழுது குழந்தையை எடுக்காமல்போனால் குழந்தை அக்னியில் விழுந்து இறந்துவிடும். அதனால் பதியின் மனதுக்குமிகுந்த துக்கத்தையுண்டாக்குவதற்கு காரணமாகயிருப்பேன். அப்படிக்குழந்தையை எடுக்கப்போனால் பதியின் நித்திரைக்குபங்கம் வரும். அதனால்பாபம்வரும் என்றுநினைத்து அக்கினிபகவானைநோக்கி தன்பாலனை தகிக்காலிருக்கும்படி கேட்டுக்கொண்டாள். அக்னியும் அவள் இஷ்டப்படியே குளிர்ந்த சந்தணகுழம்புபோல்ஆனான். பாலனும் அதில் விளையாடிக்கொண்டிருந்தது. பிறகு பதியின் நித்திரை கலைந்தபிறகு மெதுவாக குழந்தையை எடுத்துவந்தாள். இக்கதையினால் பதிவ்ரதைகளின் மகிமை எவ்வளவு என்பது தெரியவரும். முப்பத்துமுக்கோடி தேவர்களும் திருமூர்த்திகளும் அவர்களுக்குப்பயந்து நடக்கிறார்கள். சிஷ்யன்;—குருவே பதிவ்ரதைகளுக்கு தேவர்களும திருமூர்த்திகளும் அவர்களுக்கு பயந்து நடக்கின்றார்கள் என்று சொன்னீர்களே அதை விளக்க ஓர் கதைசொல்லவேண்டும்.

குரு:—சிஷ்யா இப்பொழுது சாவகாசமில்லை அடுத்தபாகத்தில் சொல்லுகிறேன். சிஷ்யன்:—குருவே எனக்கு ஒருபொழுதும் கஷ்டம்வராமலிருக்கவேண்டும் என்வீட்டில்ஒருவிதகெடுதலும் உண்டாகக்கூடாது. அப்பேர்ப்பட்ட பாக்யத்தைக்கொடுக்கக்கூடிய மந்திரம்ஒன்று எனக்கு உபதேசித்தருளவேண்டும். குரு:—சிஷ்யா, மகரிஷிசுவாமி தயாநந்தஸரஸ்வதி சம்ஸ்காரவிதியில் ஈஸ்வரப்பிராத்தனைக்காக 8-மந்திரங்கள் சொல்லியிருக்கிறார். நாம் எந்தக்காரியம் செய்ய ஆரம்பித்தாலும் முதலில் அம்மந்திரங்களைக்கொண்டு ஈஸ்வரனைஸ்தோத்திரம் செய்யவேண்டும். அப்படியார்ஸ்தோத்திரம் செய்கிறார்களோ அவர்களுக்குயாதொ

4, அஜீர்ணவாய்வு, மகோத்ரம், மலபந்தம், வயிற்றுநோய், கடுகடுப்பு ஜீர்ணமாகாமை இவைகளுக்கும் 1—4—0,
N, B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை,

5. பல்லுநோவு பல்லில் இரத்தம் சீவு வடிதல், ஈரு வளருதல்' வாய்நாற்றம். இம்மாதிரியான யாவற்று வகையருக்களும் ஔஷதம் கொடுக்கப்படும். 0—4—0,
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை,

ரு தீமையும் உண்டாகாது. அவர்கள் பூலோகத்தில் சர்வ சுகங்களையும் அனுபவித்து கடைசியில் மோக்ஷத்தை யடைவார்கள். இம்மந்திரங்களை குழந்தைகள் ஸ்திரீகள் முதலானவர்கள் சொல்லலாம் விடியற்காலத்தில் இம்மந்திரங்களைச்சொன்னால் மிகவும் விசேஷம்.

சிஷ்யன்:—சுவாமியே அம்மந்திரங்களை எனக்கு சொல்லுங்கள். குரு:—நான் சொல்லுகிறேன் நீ கவனமாய்கேள் மந்திரம் சமஸ்கிருதத்திலிருக்கிறது. அதை அர்த்தத்துடன் சொல்லுகிறேன் சமஸ்கிருதம் தெரியாதவர்கள் அர்த்தத்தைமாத்திரம் சொல்லலாம்

மந்திரம் 1.

ஓம் விச்வானிதேவசவிதுர் துரிதானிபராசுபயத்பத்ரந்தன் ஞஸுவ (யஜுர்வேதம் அத்யயம் 30 மந்திரம் 3-வது.)

அர்த்தம்.

இந்தஉலகத்தை யெல்லாம் படைத்த ஈசனே! எல்லாஐசுவரியமும் உன்கைக்குள் இருக்கிறது. நீர் சுத்தமானஸ்வரூபமுடையவர் எல்லாசுகத்தையும் கொடுக்கப்பட்டவராயுள்ளபரமேசுவரா நீங்கள் தயைகூர்ந்து எங்களுடைய எல்லா துர்க்குணங்களையும்துக்கங்களையும் விலக்குவீராக. எனக்கு சுகத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல குணங்களையும் நல்லகர்மங்களையும் நல்ல பதார்த்தங்களையும் நல்ல சுபாவங்களையும் கொடுப்பீராக.

மந்திரம் 2.

ஹிரண்யகர்ப சமவர்த்தாக்ரே பூகஸ்யஜாத: பதிரேகஆஸீத்சதாதாரபிரதிவீம் த்யாமுதேமாம் கஸ்மை தேவாய ஹவிஷா விதேயம். (யஜுர்வேதம் 13 அத்யாயம் 4-வது மந்திரம்)

அர்த்தம்.

அந்த ஸ்வயப்பிரகாசரான கடவுள் உலகத்தைப்பிரகாசப்படுத்தும்பொருட்டு சூர்ய சந்திர முதலியவற்றை உற்பத்திசெய்துவிட்டு அதற்கு அவர் ஆதாரமாக இருக்கிறார். இந்த ஜகத்தை

6. காதுநோவு, காதுவாய்வு, காதில் சீவுவடிதல் காது குடைச்சல், காது அடைப்பு முதலான வகையறுக்களும் 0—8—0.

N, B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



உண்டுபண்ணி அதற்கு ப்ரக்யாதியாகியிருப்பவர். அந்தக்கடவுள் இந்த ஜகத்உற்பத்தி ஆவதற்கு முன்னாலேயேஇருக்கிறார். அவர் சூர்ய சந்திராதிகளை நிலைநிருத்தியிருக்கிறார். நம்ஜனங்கள் சுகஸ்வரூபராகிய அந்த சுத்தபரமாத்வாவை க்ரஹணம்பண்ணுவதற்கு யோகாப்யாசம் ப்ரீயத்தோடும் பக்தியோடும்செய்யவேண்டும்.

மந்திரம் 3.

ய ஆத்மா பல்தாயஸ்விச்வ உபாஸதேப்ரசிம்யஸ்யதேவஹ. யஸ்யச்யாயாம்ருதம் யஸ்யம்ருத்யு: கஸ்மைதேவாய ஹவிஷாம் விதேம் (யஜுர்வேதம் அத்யாயம் 25. மந்திர 13-வது)

அர்த்தம்

அந்த ஆத்மக்ஞானத்தை கொடுக்கிறவரும் நம்சரீரம் ஆத்மா இவைகளுக்கு வ்ருத்திபண்ணுகிறார் அவருக்கு எல்லாவித்வான்களும் பூஜைசெய்கிறார்கள். இன்னும் அவர்கள் அந்த ஸத்யஸ்வகரூபராயும் நீடித்திருப்பவரும் இன்னும்நியாயகர்த்தராயும் இருக்கிற ஈஸ்வரனுடைய ஆக்ஞையை பணிகிறார்கள். அவரை ஆஸ்ரயிக்கிரவர்களுக்கு மோக்ஷம் கொடுப்பார். அப்படி அவருடைய கட்டளைப்படி நடவாமல் இருந்தாலும் அவரை அந்தரங்கபக்தியோடு பூஜிக்காவிட்டால் அழிவிர்க்கும் கஷ்டத்திற்கும் காரணம் ஆகும். நாம் சுகஸ்வரூபராயும் ஆத்மஞானத்தைக் கொடுக்கிறவருயும் இருக்கிற ஈஸ்வரனுடைய பாதாரவிந்தத்தை சேரவேண்டும் என்று ரொம்ப நியமத்தோடும் பக்தியோடும் அவர்கட்டளைகளை நிறைவேற்ற ஆயத்தமாய் இருக்கவேண்டும்.

மந்திரம் 4.

யப்ராணிதோ நிமிஷிதோ மகித்வைக இத்ராஜாஜகதோ பபூவய ஈசேஅஸ்யத்விபதஸ் சதுஷ்பத கஸ்மைதேவாயஹவிஷாம் விதேம் (யஜுர்வேதம் அத்யாயம் 23. மந்திரம் 3.)

அந்த ஈஸ்வரன் சேதனவஸ்துக்களும் அசேதனவஸ்துக்களும் நிறைந்துள்ள இந்தஜெகத்தில் அனந்தகுணமகிமையுள்ள

7. மூக்கில் சிலந்தி, பீனிசம் மண்டைக்குடைச்சல் இதா எல்லாவித சிரரோகங்களுக்கும் 4—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை,

வராயும் எல்லாருக்கும ஒரே ராஜாவாகவும் பிரகாசிக்கிறார். அவர் மனுஷ்யர்களையும் பசுக்களையும் சம்ரக்ஷிக்கிறார். நாம் அப்பேர்பட்ட சுகஸ்வரூபமான சகல ஐஸ்வர்யங்களையும் கொடுக்கிறவராய் இருக்கிற பரமேஸ்வரனை நல்ல வஸ்துக்களைக்கொண்டு முழுமனதுடன் பூஜைசெய்யவேண்டும்.

மந்திரம் 5

ஏனத்யௌருக்ரா ப்ரிதிவீசத்ரிடா ஏனஸ்வஸ்தபிதம் ஏனநாகயோ: அந்தரிக்ஷேரஜஸோ விமானக: கஸ்மை தேவாயஹவிஷாம் விதேம (யஜுர்வேதம் அத்யாயம் 32 மந்திரம் 6.)

அர்த்தம்.

அந்த ஈஸ்வரன் சூர்யாதிகளையும் பூமியையும் தாரணம்செய்கிறார். அந்த ஜெகதீஸ்வரன் சுகத்தைக்கொடுத்தும் துக்கத்தை விலக்கி மோக்ஷத்தைக்கொடுக்க வல்லமையுள்ளவர். அவர்எல்லா லோகலோகாந்தரங்களையும் விசேஷமானபுத்தியினால் (ஆகாசத்தில் பக்ஷிகள் பறப்பதுபோல்) ஸ்ருஷ்டித்து அவர்களை சுற்றும்படிசெய்கிறார். நமக்கு சுகத்தைகொடுக்கிற பரமாத்மா பாதாரவிந்தத்தை அடைவதற்காக முழுபக்தியோடும் பூஜைசெய்யவேண்டும்.

மந்திரம் 6

ப்ராஜாபதேனத்வதே தான்யன்யோ விஸ்வா ஜாதானி பரிதாபபூவ யத்காமாஸ்தே ஜுஹுமஸ்தன்னோ அஸ்துவயம்ஸ்யாம்பதயோ ரயீணாம் (ரிக்குவேதம் மண்டல் 10 சூத்தரம் 121 மந்திரம் 10)

அர்த்தம்

எல்லா பிரஜைகளுக்கும் சுவாமியே பரமாத்மா! உங்களைத் தவிர ஜடபதார்த்தமாவது ஜீவனுடைய பதார்த்தமாவது ஒன்றில்லை. தங்களை திரஸ்கரிககிரவஸ்து ஒன்றும் இல்லை. எல்லாவற்றிற்கும்மேல் நீங்கள்தான். நான் எந்தெந்த பதார்த்தங்களை இச்சிக்கிறேனோ எதை மனதில் நினைக்கிறேனோ அவைகளைநிறைவேற்றிவைக்கவேண்டும். நான் எல்லாஐஸ்வர்யத்துக்கும் ஸ்வாமிஆவேன்.

8. குஷ்டமேகக, வெள்ளைகுஷ்டம், குஷ்டம் முதலானவைகளுக்கும், 25—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



மந்திரம் 7.

ஸநோ பந்துர்ஜனிதா ஸ, விதாதா தாமானி வேதபுவனானி விஸ்வா | யத்ரதேவ, அம்ருதமான ஸானஸ்த்ரிதியே, த்ராமனத்யேயைரயந்த || (யஜுர்வேதம் அத்தியாயம் 32 மந்தரம் 10).

(அர்த்தம்) அந்த ஈஸ்வரன்நம்ஜனங்களுக்குசகோதாருக்கு சமானம், அவர்சுகத்தை கொடுக்கிறார். எல்லா ஜகத்தையும் உற்பத்திசெய்கிறவர். எல்லா வேலையும் பூர்ணம் செய்கிறவர். அவர் நாமம், ஸ்தானம், ஜன்மம் எல்லாவற்றையும் அறிகிறார். இன்னும் இந்த சம்சார சுகத்தைவிட்டு நித்யமாகிய மோக்ஷரூபத்தை தரிக்கிறார் அப்பேர்ப்பட்ட பரமேஸ்வரனை மோக்ஷத்தைக் கொடுக்கும்படி வித்வான்கள் பூஜைசெய்கிறார்கள். அந்த பரமாத்மா நம்முடைய ஆசாரியர் அரசன், நியாயாதிபதி. நாம் எப்போதும் அவரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

மந்திரம் 8.

அக்னேயநய ஸுபதாராயே அஸ்மான் விஸ்வானிதேவ வயுனானி வித்வான் யுயோத்யஸ் மஜ்ஜுஹுராணமேனோ, புயிஷ்டான்தே, நம, உக்திம் விதேம.(யஜுர்வேதம் அத்தி 40. மந்திரம்16)

(அர்த்தம், ஏ சுயம்பிரகாசா, ஞானஸ்வரூபா, நீர் எல்லாஜகத்திற்கும பிரகாசத்தைகொடுக்கிறீர். எல்லா சுகத்தையும் கொடுக்கிற பரமேஸ்வரா! உங்களிடத்தில் எல்லாவித்தையும் இருக்கிறது. தயவுசெய்து எங்களுக்கு ஞானமுண்டாக்கி ராஜ்யத்தையும் ஐஸ்வரியத்தையும் அடையச்செய்யுங்கள். நல்லதர்மமுடைய மகான்கள் மூலமாய் முழுபாக ஞானத்தையும் நல்ல கர்மங்களையும் அடையச்செய்யுங்கள். மேலும் எங்களுடைய கெட்டகர்மங்களையும் துர் எண்ணங்களையும் விலக்குங்கள். இதற்காக நாங்கள் அநேகவிதமான ஸ்துதிகளால் உம்மை வணங்கி எப்போதும் ஆனந்தத்தோடு பூஜை செய்கிறோம். (ஸம்ஸ்கிருத பாஷையின் மந்திரங்

1. குஷ்டமேகம், வெள்ளைகுஷ்டம், குஷ்டமுதலானவைகளுக்கு, 25—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுதேவை,

கள் தமிழில் ஸ்பஷ்டமாய்வராது ஆகையால் அர்த்தத்தைக்கொண்டு ஈஸ்வரனைத்துதிசெய்யுங்கள். நான் இதை தமிழில் நிரம்பச் சுருக்கி எழுதியிருக்கிறேன். இதில் பிழை ஏதேனும் இருந்தால் மன்னிக்கும்மாறு கோருகிறேன்.) சிஷ்யன்;—சுவாமி யோகீஸ்வரர்கள் விளையாடக்கூடிய ஞானச்சீட்டு எப்படி அதை எனக்கு கொஞ்சம் தயவுசெய்து சொல்லவேண்டும். குரு:—சிஷ்யா நீ கேட்டகேள்வி மிகவும் நன்றாய் இருக்கிறது ஞானச்சீட்டின் பெயரை மாத்திரம் இப்பொழுது சொல்லுகிறேன். நீ கவனமாய் கேள்.

1. பிர்மம் 2. ஜீவப்பிர்மம். 3. சத்தோ, ரஜோ, தமோ 4 வேதம் நான்கு ரிக்கு, யஜுர், சாம, அதர்வ 5, காம, குரோத லோக, மோக, அகங்காரம் 6. வைஸேஷிக, மீமாம்ஸா, ந்யாய, போக, ஸாங்க்ய வேதாந்த, 7. ஸப்தரிஷிகள், விஸ்வாமித்ர, ஜமதக்னி, பாரத்வாஜர், கௌதமர், அத்ரி, காஸ்யப வஸிஷ்ட 8, அஷ்ட சித்திய அணிமா, லகிமா இத்யாதி 9. நவநிதிகள் 10. பத்திந்திரியங்கள் ஜாகி. பாபம் ராணி. புத்தி அரசன். மனது.

சிஷ்யன்:—ஸ்வாமி இந்த சீட்டுகளின் பெயரை மாத்திரம் இப்பொழுது நீங்கள் எனக்கு சொன்னீர்கள். ஆனால் எனக்கு அதை எப்படி விளையாடுகிறார்கள் என்பதை எனக்கு தயவுசெய்து இப்பொழுது சொல்லவேண்டும். குரு:—சிஷ்யா இப்பொழுது விளையாடும்விதம் சொல்லுவதற்கு சாவகாசம் இல்லை. சிஷ்யன்:—எதற்காக சாவகாசம் இல்லை என்று சொல்கிறீர். குரு நான் இப்பொழுது நாடிக்ஞானத்தைப்பற்றி எழுதவேண்டி இருப்பதால் அதைச்சொல்ல சாவகாசம் இல்லை.

### நாடிக்ஞானம்.

ஒரு சமயம் பாம்புமாதிரியும் மற்றொரு சமயம் தவளைமாதிரியும் நாடிநடந்தால் வாதம் பித்தம் இரண்டு சம்பந்தப்பட்டிருக்கின்றதென்றும் அன்ன பக்ஷிமாதிரியும் பாம்புமாதிரியும் நடந்தால் வாதம் கபம் சம்மந்தப்பட்டிருக்கின்றதெனவும் குரங்கு தவளை அன்னம் இம்மாதிரி நாடிநடந்தால் பித்தம், கபம், இரண்டும் சம்மந்தப்பட்டிருக்கிறதென்றும் ரம்பம் அறுப்பதுபோல் நாடி கொஞ்சம் நடந்து மறுபடியும் நின்று பிறகு நடந்தால் சன்னி பாதம் என்றும், மெள்ள மெள்ள வளைந்து வளைந்து நாடிநடந்தால் மனிதன் கவலையுற்றிருக்கிறானென்றும் அறியவும். அப்படி நடக்கும் நாடிக்கு தம்பநாடி என்று பெயர். அந்தநாடி ஓர் இடத்தில் ஸ்திரமாயடிக்கும். அந்த நாடியில் சின்ன நாடி அப்படி அடித்தால் புருஷனுக்கு மிருத்யு சமீபத்திருக்கின்றது என்று அறியவும். இதே நாடி சன்னி பாதம் சூசிபிக்கும். காய்ச்சல் நிரம்பஜாஸ்தியடித்தால் நாடி சூடுகாண்பிப்பதோடு வேகமாகநடக்கும் ரோகிக்கு நாடி விதவிதமாக நடந்தால் சாவு நிச்சயம். ஒரேவிதமாகநடந்தால் அந்த மனுஷ்யாளுக்கு பிராணபயம் இல்லை. காமிகளுக்கு நாடி சீக்கிரம் நடக்கும் குரோதிகளுக்கும் கவலையுள்ளவர்களுக்கும் நாடி மெதுவாக நடக்கும். பயம் பூதம் முதலியவைகளால் பிடிக்கப்பட்டவர்களுக்கும் ஜிரண சக்தியற்றவர்களுக்கும் தாதுஹீனமுள்ளவர்களுக்கும் நாடிநிரம்பவும் மெதுவாகவும் நடக்கும். ரத்தமில்லாதவர்களுக்கு நாடிகனமாக நடக்கும். கொஞ்சம் உஷ்ணமாகயிருக்கும். சீதபேதியுள்ளவர்களுக்கு நாடிகனமாகநடக்கும். பசியுள்ளவர்களுக்கு நாடிநிரம்பவும் சஞ்சலத்துடன்நடக்கும். ஜாஸ்திசாப்பிடுகிறவர்களுக்கு நாடிநிரம்பவும்லேசாகநடக்கிறது. அதாவது சீக்கிரமாகநடக்கிறது. சாப்பிட்டவுடன் நாடிமெதுவாகநடக்கும், மலச்சிக்கலுள்ள புருஷர்களுக்கு நாடி சீக்கிரமாகநடக்கும் வியாதியில்லாதவர்களுக்கு நாடிபலமாகநடக்கிறது. நாடிபரீக்ஷை அநேகவிதம்உண்டு எப்படியோகிகள் ஈஸ்வரனைத்யானம் செய்கிறார்களோ அதுபோல் நல்லவயித்யர்கள் நாடியைக்கவனித்து அதன் மூலமாக சரீரத்தின் சுகதுக்கங்களை அறிகின்றார்கள்.

---

5. பல்லுநோவு பல்லில் இரத்த சீழ் வடிதல், ஈறு வளருதல் வாய்நாற்ற. இமாதிரியான யாவற்று வகையருக்களும் ஔஷதம் கொடுக்கப்படும். 0—1—0

N B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



3. கண்சம்மந்தமான பார்வை குறைவு, சாலேஸ்வரம், கண்குடைச்சல், கண்ணில் புரையுண்டாவது, கண்ணில் நோயுண்டாவது இம்மாதிரியானவகையருக்கள் யாவையும் உடனே சொஸ்தப்படும் 2—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை.

சிஷ்யன்;—குருவே: நாடிக்ஞானம் இத்துடன் முடிந்தது இன்னம் இருக்கிறதா தயவுசெய்து சொல்லவேண்டும்.

குரு;—சிக்ஷா முடிந்தது. இனி நான் மூத்திரபரீக்ஷை, தூதபரீக்ஷை, ரோகிபரீக்ஷை, காலக்கியானம், சகுனபரீக்ஷை, சுவப்பனபரீக்ஷை, இவைகளை சொல்லவேண்டும் அவைகளை அடுத்த பாகத்தில்சொல்லுகிறேன். இப்பொழுது என்னுடையஜீவியசரித்திரம் பாக்கியைசொல்லிமுடிக்கிறேன். குரு;—சிஷ்யா நான் புண்டரிகிராமத்தில் இரண்டுமாதகாலம் இருந்தேன். அங்கே எனக்கு ஒரு சிஷன் அகப்பட்டான். அவன் ரவாஜாதி குருஸ்வாமியின் குமாரன் சேதாலால் இரண்டு மாதம்சென்ற பிறகு பண்டிட் நந்தராம ஹகீம் குமாரனை சாதிலால் அபயஸ் கிருஷ்ணத்தும் நானும் புறப்பட்டு முஜபர்நகர் கிம்பிலி மூரத்நகர், டில்லிரர்ஜ புதனத்திலுள்ள அல்வர் ஆஜ்மீர் நசிராபூரத் சாவனி முதலான இடங்கள் போய் பிரசங்கங்கள் செய்தோம். பிறகு கோட்டாஸ்டேட்டுக்குவந்து சேர்ந்தேன், அங்கு கோவிந்தராம் மஹேஸ்ரி வைஸ்யஇத்யாதி ஜனங்கள் என்னை அங்கு சிலநாள் இருக்கச் சொன்னார்கள். அங்கு நான் ஸனாதர்மசபையில் துளசிக்ருத ராமாயணம் வாசித்து வியாக்கியானம் செய்தேன். அதில் எனக்கு ரூ 200 பெரும்படியான சாமான்கள் இனும். நானும் கிருஷ்ணதத்தும் என்ஊருக்குவந்துசேர்ந்தோம். நான்மகமத் பூர்தாலுக்கா மண்டாவரிலுள்ள என்மாமனார் பண்டித்நியாதர்மல ஹலுவாயி வீட்டுக்குப்போய் என்மனைவியை அழைத்து வந்தேன் அழைத்து ஒரு மாதத்திற்கெல்லாம். என்மாமனார் வந்து என்மனைவியை அழைத்துக்கொண்டு போய்விட்டார் பழயபடிநானும் கிருஷ்ணதத்தும் அமரோவாமுராதாபாத் சம்பல்டாக்குர்துவாரா பவாயா சஹஜான்பூரில் முதலியஇடங்களுக்கு போய் பிரசங்கம் செய்தோம். படாகாமிலும் சஹஜான் பூரில் எனக்கு நிரம்ப இனாமும் கௌரவமும் கிடைத்தது. மறுபடியும் நான்போய் சாயவேடத்தில்

4. காதுநோவு, காதுவாய்வு, காதில் சீழ்வடிதல் காது குடைச்சல் காது அடைப்பு முதலான வகையருக்களுக்கு 0—8—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



கஜிவாபாத்போய்கொஞ்சநாள்அங்கிருந்து பிறகு ஹரித்துவாரத்துக்குபோய் சேர்ந்தேன் அங்கு பிரசங்கம் செய்துவிட்டு அங்கிருந்து ஹரிஷிகேஸ்போனேன். அங்கே என்தகப்பனாரை கண்டேன் அவருடன் கூட பத்திரிகாஸ்ரமம், பத்திரிநாராயணம் தேவப்பிரயாக, நந்தபிரயாக கர்ணபிரயாக, விஷ்ணுப்பிரயாக, அகஸ்திய ஆச்ரமம் இன்னும் அநேகஇடங்களுக்குப் போய்தரிசனம் செய்து விட்டு, பிறகு பத்ரிநாரயணம் போய்ச்சேர்ந்தோம் நான் அந்தஊரில் பிரசங்கம் செய்தேன் அதனால் எனக்கு அநேக வெகுமதிகள் கிடைத்தது. அங்கு அப்பொழுது தேவகி நந்தனாட்சாரியசுவாமிகள் வந்திருந்தார் அங்கேநானும் அவரும் சந்தித்தோம் பிறகு நானும் என்தகப்பனாரும்ஹரித்துவாரம்போனோம் அங்கிருந்து டேகிரிஸ்டேட்டுக்குவந்தேன். சோவைஜாதியைச் சேர்ந்த ஒருபிராமண வாலிபன் என்தகப்பனாரைப்பார்த்து சுவாமிநான் தங்களுடன் கூட தங்களுக்கு சிசுரூஷை செய்து கொண்டிருக்கிறேன். எனக்கு சாப்பாட்டுக்கில்லை தாங்கள் என்னை அங்கீகரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். என்தகப்பனார் அதற்குசம்மதித்தார். மூவரும் டேரிஸ்டேட்டுக்குவந்து சேர்ந்தோம் அங்கு அந்தசமயம் மகாராஜா இல்லை. மகாராணி என்னை பிரசங்கம்செய்யச்சொன்னார்கள் நான் பிரசங்கம் செய்து எனக்கு நல்லவெகுமதி கிடைக்கும்சமயம் சோவைஜாதிப்பையன் தலையாலும், வாயாலும், வயற்றிலும், அடித்துக்கொண்டு அழுது நான்பதரிநாதம் போகவேண்டும் அந்தசிலவை நீங்கள் என்னை அழைத்துவந்துவிட்டபடியால் கொடுக்கவேண்டும் என்றான் அதனால் எங்களுக்கு ராஜாங்கத்தில் ரூ 50 தான் கொடுத்தார்கள் அதில் ரூ 25 அந்தசோவைப்பையனுக்கு கொடுத்துவிட்டார் அங்கிருந்து நாங்கள் ஹரித்துவாரம்வந்து சாஹரான்பூர் வந்துடாரடேன்வந்து சேர்ந்தோம் அங்கு அந்த ஊருக்குபெரியவராகிய லக்ஷ்மணதாஸ் பாவாவிடம்வந்து பிரசங்கம்செய்தேன்.

5. மூக்கில் சிலந்தி, பீனிச மண்டைக்குடைச்சல் இதர எல்லாவித சிரரோகங்களுக்கு 4—0—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

அங்கிருந்து அம்பாலா, பட்டியாலா, நாபேமுதலான இடங்களுக்குபோனேன். நாபேயில் மகாராஜா ஹீராசிங்முன்னால் ஓம்காரவியாக்யானம் செய்தேன் அங்கே எனக்கு நல்ல சன்மானம் கிடைத்தது. அமிர்தசார் லாகூர் இத்யாதி யிடங்களில் சனாதனதர்மஸபையில் பிரசங்கம் செய்தேன் சிந்துதேசத்தில்சக்கர் சிக்கார்பூரில் நல்லபேர் எனக்கு கிடைத்தது. ஹைதாராபாத்தில் (சிந்து)அந்தசமயம் தீனதயாளுவாபாசஸ்பதிமுன்னிலையில் பிரசங்கம் செய்திருக்கிறேன். அப்பொழுது என்பேர் பிரசித்தமாயிற்று தீனதயாளு என்னுடைய பிரசங்கத்தை ஜனங்கள் சிலாகிப்பதை கண்டு என்பேரில் பொறாமை யடைந்தான் நான் பிறகு அங்கிருந்து தண்டைபாதம் காராச்சி முதலிய இடங்களுக்கு போனேன். காராச்சி நான் போய் 10நாள்வரையில் சனாதநர் மச்சபையில் பிரசங்கம் செய்ய இடம் கொடுக்கவில்லை பிறகு எனக்கு காய்ச்சல்வந்து விட்டது அப்பொழுது எனக்கும் என்தகப்பனாருக்கும் சனாதனதர்ம சபையில் ஆகாரத்துக்கு யாதொரு குறைவின்றி பார்த்து வந்தனர் எனக்கு 15 நாள் உடம்பு அசௌக்கியமாயிருந்தது. எனக்கு உடம்பு சௌக்கியமான பிறகு மறுபடியும் போய் பிரசங்கம் செய்ய அனுமதிகேட்டேன் அவர்கள் முன்போல் சால்ஜாபு சொல்லிக்கொண்டுவந்தார்கள். பிறகு விசாரித்ததில் தீன தயாளு பாசஸ்பதி நான்காராச்சியிலிருப்பதை தெரிந்து கொண்டு சபை அதிகாரிகளுக்கு எனக்கு பிரசங்கம் அனுமதி கொடுக்க கூடாதென்று லெட்டர் எழுதியிருந்ததாக தெரிந்தது அதனால் மனவருத்தமடைந்து வந்து பிரசங்கம் செய்யாமல் போகக்கூடாதென்று டவுன் ஹாலை ஒருநாளைக்கி வாடகைக்குவாங்கி ஓம் காரவியாக்யானப்பிரசங்கம் செய்தேன். ஜனங்கள் எனக்கு என் இடம்கொடுக்கவில்லை என்று சனாதன சபையாரிடம் சண்டைசெய்ய ஆரம்பித்தார்கள். காராச்சியில் ஆர்யஸமாஜ்மெம்பர் ஒருவர் என்னை பிரசங்கம் செய்யச்சொன்னார். நான் அப்பொழுது ஆர்யஸமாஜ

2 எல்லாவித வாய்வுகளுக்கு அதிசீக்கிறத்தில் சொஸ்தப்படுத்தும்படியான ஔஷதங்களுக்கு 1—8—0

N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை



மெம்பர் அல்ல, நான் அங்கிருந்து என் தகப்பனாருடன் போரவந்தர் அல்லது சுதாமாபுரிவந்து அங்கு திவான்மணிலால் அசிதாரய் உதவியால் மூன்றுநாள் பிரசங்கம்செய்தேன். அங்கு எனக்கு நல்லவெகுமதி கிடைத்தது. சிஷ்யன்:—சுவாமி தாங்கள் ஜீவியசரித்திரம் இவ்வளவுதானா இன்னும் இருக்கிறதா. குரு:—இன்னும் இருக்கிறது. இனிமேல்தான் என்னுடைய சரித்திரத்தில் முக்கியமான சங்கதிகள் வரப்போகின்றது. மிகவும் உபயோகமாக இருக்கும். இப்பொழுது இந்திரஜாலம் மகேந்திரஜாலம் முதலிய சங்கதிகள் சொல்லுகிறேன் கவனமாய்க்கேள்:—

## இந்திரஜாலம்

குரு:—சிஷ்யா முதல்பாகத்தில் 26-ஜாலங்கள் சொல்லியிருக்கிறேன் இப்பொழுது சிலஜாலங்கள் சொல்லுகிறேன் கேள்.

27. மோதிரத்தை கிணற்றில் போட்டு மறுபடியும் வரவழைப்பது:—இரண்டுமோதிரம் ஒரேமாதிரிதயார்செய்து ஒரு மோதிரத்தை நம்முடையகையில்வைத்துக் கொள்ளவேண்டும் மற்றொருமோதிரத்தை நம்முடைய ஆசாமி ஒருவனிடம் கொடுத்து சபையில் உட்காரவைத்து விடவேண்டும். பிறகுசபையில் யாராவது ஒரு மோதிரம் கொடுங்கள்என்று கேட்டு நம்முடைய ஆசாமியிடம் வாங்கி அதை உடைத்து கிணற்றில் போட்டுவிடவேண்டும். பிறகு சபைக்கு தெரியாமல் இரண்டாவது மோதிரத்தை கத்திரிக்காயிலோ தேங்காயிலோ ஒளித்துவைத்து பிறகு சபைக்கு முன்கிணற்றில்போட மோதிரத்தை வரவழைக்கிறேன் பாருங்கள்என்று சொல்லி ஒளித்துவைத்திருந்த சாமானிலிருந்து எடுத்துகொடுத்துவிடவும்.

28. மோதிரம்மாற்றுதல்;—வேறுயாரிடமாவது சபையில் ஒருமோதிரம்வாங்கி அதை தன்கையில் அடக்கிக்கொண்டு முன்புதயாரித்துவைத்திருந்த மோதிரத்தை ஒரு கெட்டிடவலில் ஒரு

4. அஜீர்ணவாய்வு, மகோதர, மலபந்த, வயிற்றுநோய், கடுகடுப்பு ஜீர்ணமாகாமை இவைகளுக்கு 1—4—0,

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

யருக்கும் தெரியாமல் வைத்துமூடி வேறொருவர் கையில் கொடுத்து உடைத்து கிணற்றில் போடச்சொல்லி பிறகுமுன் தந்திரத்திலுள்ளபடி செய்யவும்.

29. கைகுட்டை தந்திரம்.—மெல்லியபட்டினாலாவது கிளாஸ்கோமல்லினாலாவது கைகுட்டை ஒன்றுதயார்செய்துஅதைகையில்கட்டியிருக்கும் கெடிகாரத்தின் கீழாவது அல்லது ஷர்ட் கப்பல்வைத்திருக்கும்ரகசிய பாக்கெட்டிலாவது வைத்துக்கொண்டு சபைக்குமுன் ஒரு கைகுட்டையை யெடுத்து கையைமூடி ரகசியமாக கையில் ஒளித்துவைத்திருந்த கைகுட்டையை எடுத்து காட்டவும். 30. குடைதந்திரம்:—இரண்டு குடைகள் ஒரேமாதிரியிருக்கவேணும். அதில் ஒன்று துணி கிழியாமலும் மற்றொன்று துணி கிழிந்துமிருக்கவேண்டும் உடனே சபையில் 10-12 கைகுட்டைகளை வாங்கி ஒரு சாணிகாகிதத்தில் சுற்றி பொட்டளம் கட்டவேண்டும். உள்ளே இருக்கும் நம்முடைய ஆசாமி வர்ணகாகித துண்டுகளை கைகுட்டை பொட்டளம்மாதிரி கட்டி தயார் செய்து வைத்துக்கொள்ளவேணும், உடனே நம்முடைய பையனில் ஒருவனை யழைத்து சபைக்கு காட்டி அவனை மேஜைமுன் நிறுத்தி ஒரு விரித்தகுடையை அவனை சாத்துபிடித்துக்கொள்ளச்செய்து அவன் முகத்தில் பலவித வர்ணங்களைப் பூசவேண்டும் சபையார் பையன்மேல் கவனமாயிருப்பார்கள். அப்பொழுது நம்முடையஆசாமி காகிதபொட்டளத்தை வைத்துவிட்டு கைகுட்பொட்டளத்தை யெடுத்து உள்ளே எடுத்துப்போய் கிழிந்தகுடையின்மேல் சுற்றி வைத்துவிடவேண்டும். ஒரேவிதமானகுடை உறைகள் இரண்டுவேண்டும். நல்லகுடையை ஒருஉறையில்போட்டு அதை சபையாருக்கு தெரியாமல் ஒளித்துவிட்டு கிழிந்த குடையை உறையிலிட்டு ஒருவரிடம் கொடுத்து பத்திரமாகவைத்துக்கொள்ளச் சொல்லிவிடவும். உடனே சபையாரை பார்த்து உங்கள் கைகுட்டைகளை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி காகிதபொட்டலத்தை யவிழ்த்து காண்பிக்கவும். பிறகு குடையைவாங்கி பிரித்தால் கைகுட்டைகள் அதில்இருக்கும்.

வெள்ளை, மஞ்சள், இரத்தஒழுக்கல், உஷ்ணங்கள் 3—8—0
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



178915

31. பன்னீர் வரவழைத்தல்:—இரண்டு மெல்லிய [illegible]களை சேர்த்து ஒரு டம்ளர்போல் செய்யவேண்டும். உள்ளேயிருக்கும் டம்ளரின் அடியில் ஒருதுவாரம்செய்து அதின்வழியாய் பன்னீர் ஊற்றிவிட்டு தேன்மொழுகால் அடைத்துவிடவும். சபையில் வந்து டம்ளரைக் கவிழ்த்துக்காட்டி பிறகு பன்னீர்வரவழைக்கின்றேன் என்று சொல்லி ஒருடவலை போட்டுமூடி தேன்மொழுகை தகர்த்துவிட்டு உதரவும். பன்னீர் எல்லார்மேலுந்தெரிக்கும்.

32. கைக்கெடியாரடிரிக்ஸ்:—சபைக்கு வருமுன் ஒடும்கெடியாரம் ஒன்று தயார்செய்து வைத்துக்கொண்டு சபையில் ஒரு கடியாரம்வாங்கி அதை தன் கையில் ஒளித்துக்கொண்டு தன்கடிகாரத்தை ஒருடவலில் கட்டி அதை அங்கிருப்பவர்களில் இவர் காதில்வைக்க கடியார[illegible]கேட்டும் அவர்கள் அதேகடிகாரம் என்று எண்ணுவார்கள். பிறகு அதை உடைக்கச்செய்து அதை சபைக்குகாட்டவும். அதேமாதிரி வேறொருடவலில் நாம் சபையில் வாங்கி கைகெடிகாரத்தை காட்டி முன்காட்டிய டவலை அப்புறப்படுத்திவிட்டு அச்சபைக்கு மறுபடிஒருவன் காதில் வைத்து கடிகாரம் ஒடுகின்றதாவென்று கேழ்க்கவும். அவன் ஒடுகிறதென்பான். பிறகுகடிகாரத்தை எடுத்துகொடுத்துவிடவும்.

33. ரகசியகாகிதம் எழுத இங்கி:—5 ரூபாயிடை கங்கத்திராவகத்தை ஒரு பாட்டில் தண்ணீரில் கலந்து குலுக்கி குளிர்ந்த பிறகு அதை இங்கிக்கு பதிலாகதோய்த்து எழுதவும். நெருப்பில் எழுதியகாகிதத்தை காண்பித்தால் கறுப்பு எழுத்துகள் தெரியும்

34. ஒருதிராம் கோபால்ட்க்ளோரைட் எடுத்து எட்டுஅவுன்ஸ்ஜலத்தில் கலந்து எழுதவும். எழுத்துதெரியாது நெருப்பில் காட்டினால் நீலமாகத்தெரியும்.

1. கறிமேகம், வெள்ளைகுஷ்டம், குஷ்டமுதலானவைகளுக்கு,
25—0—0.
N. B:—கமிஷன் ஏஜண்டுதேவை,

35. சிகப்பு அசிடேட் of. கோபால்ட் 1 டிராம் எடுத்து 8. அவுன்ஸ் தண்ணீரில் கலந்து மேல்சொன்னபடி எழுதி நெருப்பில்காட்ட நீல அக்ஷரங்கள்தெரியும் கொஞ்சநேரம் கையில் வைத்து மந்திரம் போடுவதுபோல் பாசாங்குசெய்யவும். கொஞ்சநேரத்தில் எழுத்துகள் மறைந்துவிடும்.

சிஷ்யன்:—சுவாமி இந்திரஜாலம் மகேந்திர ஜாலம் இன்னும் இருக்கிறதா. குரு:—சிஷ்யா இன்னும் இருக்கிறது பிறகு சொல்லுகிறேன் இப்பொழுது சில்லரை வியாதிகளுக்கு மருந்துகள் சொல்லுகிறேன்.

சிஷ்யன்:—சுவாமி! இந்தக்கலத்தில் மனிதர்மிகவும் வியாதியினால்பிடிக்கப்பட்டு மிகவும்வருத்தத்தை அடைகிறார்களே, அவர்களுக்கு உபயோகமாகும்படி சிலமருந்துகள் சொல்லுங்கள் குரு;—சிஷ்யா இந்தஉலகத்தில் வியாதிகள் அதிகமாக இருக்கின்றன, அநேகஜனங்கள் வயிற்றுவலி நீர்கடுப்பு, முதலியவைகளினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிலர் ஓயாத தலைவலியினால் கஷ்டப்படுகிறார்கள். சிலர்தேள்கொட்டின உடன் மந்திரவாதியையோ அல்லது வைத்தியரிடமோ ஓடுகிறார்கள். இவர்களுக்கு மிகவும் உபயோகமான மருந்துகளெல்லாம் சொல்லுகிறேன் இந்தமருந்துகள் செய்ய அதிகவிலைபிடிக்காது. எந்தவியாதிவந்தாலும் சுலபமாய் நிவர்த்திசெய்துகொள்ளலாம். இந்தமருந்துகளோடுகூட எம். ஜே. ஷர்மாவால் செய்யப்பட்ட ஆர்யமாததிரைகளின் டப்பி ஒன்று இருந்தால் வேறேவைத்தியரைத் தேடவேண்டியதில்லை. நான் சொல்லப்போகும் மருந்துகள் நம்வீட்டிலிருக்கும் சாமான்களிலிருந்தேசெய்யலாம். இந்த சாமான்களை நாம் சமயலுக்கு மாத்திரம் உபயோகப்படுத்துகிறமேதவிர மற்ற விஷயங்களுக்கு உபயோகிக்கிறதில்லை, உப்பினால் அநேகபிரயோஜனம் உண்டு. சிஷ்யன்:—சுவாமி அதை தயவுசெய்து சொல்லுங்கள். குரு;—சொல்லுகிறேன் உப்பிலிருந்துசிலமருந்துகள் செய்

2. காதுநோவு, காதுவாய்வு, காதில் சீழ்வடிதல் காது குடைச்சல் காது அடைப்பு முதலான வகையறுகளுக்கு 0—8—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



யும்முறைகளை சொல்லுகிறேன். தேள்கொட்டுக்கு உப்பை நல்ல தண்ணீரில் ஒன்றாகக்கரைத்து, தேளினால் கொட்டப்பட்டவரின் கண்களில் ஒவ்வொரு துளி விடவும் உடனே விஷம் இறங்கிவிடும் 2-தலைவலிக்கு மேல்சொன்ன ஜலத்தை இரண்டுகண்களினும் ஒரு ஒரு சொட்டுவீதம் விட்டு இரண்டுபொட்டையும் பிடித்து உருவிவிடவும் கொஞ்சம் அனுகூலம் இருந்தால் இன்னம் இரண்டுதரம் போடவும் போட்டவுடன் சொஸ்தமாகிவிடும் 3-தலையில் பூச்சி அரித்து மயிர்விழுந்து விடுவதற்கு உப்பை நன்றாக பொடிசெய்து அந்தஇடத்தில் நன்றாகத்தேய்க்கவும்உடனே அந்த இடத்தில் மயிர்வளரும் வளர்ந்தால் மறுபடியும் விழாது. சிஷ்யன் உப்பில் பிரயோஜனம் இந்த மூன்று விஷயங்களில்தானா! குரு:—இல்லை. இன்னும்அநேகம்இருக்கிறதுபிறகுசொல்லுகிறேன் புளியின் முக்கிய உபயோகங்கள் சொல்லுகிறேன்கேள் (4) பித்த திரேக முடையவர்களுக்குத் தேள்கொட்டினால் வாந்திமுதலியவை எடுத்தால் வேறு ஒருவர் கொஞ்சம் புளியை எடுத்து வாயில் போட்டு மென்று அவருக்கு வலதுபுறம் கொட்டியிருந்தால் இடது காதில் ஊதவும் இடதுபுறம் கொட்டியிருந்தால் வலதுகாதிலும் ஊதவும். இப்படிசெய்தால்உடனே விஷம்இறங்கிவிடும் 5-புளியங்கொட்டையின்உபயோகம் தேள்கொட்டின இடத்தில் புளியங்கொட்டையை நன்றாக சூடுபெறத்தேய்த்து அந்தசூட்டோடு வைக்கவும், வைத்தவுடன் பிடித்துக்கொள்ளும். விஷம் இறங்கினவுடன் தானாகவே விழுந்துவிடும் (6). மலமூத்திரங்களுக்கு போகையில் எரிவது நிற்பதற்கு புளியங்கொட்டையை 3 நாள் தண்ணீரில் ஊரப்போடவும். தோலியை நீக்கி வெள்ளைப் பருப்பை எடுத்து நன்றாகஅரைத்து அதில் அரைரூபாய்எடை எடுத்து அரை ரூபாய்எடை கல்கண்டு சேர்த்து காலையில் 5½ மணிக்குச்சாப்பிடவும். மிகஜாஸ்தி எரிச்சல் இருந்தால் 7-நாள்இந்தமாதிரிசாப்பிடவும். கொஞ்சமாகஇருந்தால் 3-நாள்சாப்பிடால் உடனே

2. எல்லாவித வாய்வுகளுக்கு அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும்படியான ஔஷதங்களுக்கு 1—8—0

N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை

சொஸ்தமாகும். சிஷ்யன்;—இன்னம் ஏதாவது சில்லரை வியாதிகளுக்கு மருந்து சொல்லுங்கள். குரு:—வெங்காயத்தின் உபயோகம் சொல்லுகிறேன் கேள். (7) தேள்கொட்டுக்கு வெங்காயம் உபயோகிக்கலாம். வெங்காயத்தை பிழிந்து கண்ணுக்கு ஒரு சொட்டுவீதம் விட்டுவிடவும். விஷம்இறங்கிவிடும் (8) கண்வலி கண் சிவத்தல் முதலியவைகளுக்கு. வெங்காயத்தை எண்ணெயில் பிழிந்து நன்றாகக்காய்ச்சி ஓசை அடங்கினபிறகு கீழே இறக்கிவைத்துவிடவும். குளிர்ந்தபிறகு சீசாவில் அடைத்துவைத்துக்கொண்டு ஒரு ஒரு சொட்டு கண்ணில்போட்டுக்கொள்ளவும். மேற்சொன்ன வியாதிகள் சொஸ்தமாகிவிடும். சிஷ்யன்;—மிளகின் உபயோகத்தைச் சொல்லவும். குரு:—மிளகு மிகவும் உபயோகமானது எந்தமருந்துசெய்தாலும் மிளகு சேர்க்கவேண்டும். விஸ்தாரமாக மிளகின்உபயோகத்தை அடுத்தபாகத்தில் சொல்லுகிறேன் இப்பொழுது சாவகாசமில்லை.

சிஷ்யன்—சுவாமி பெருங்காயத்தின் உபயோகங்கள் என்ன. குரு:—சிஷ்யா பெருங்காயம் வாயு, வயறு ஒப்புதல் முதலியவைகளைக் கண்டிக்கும். (9) பெருங்காயத்தை நன்றாக நெய்யில் வறுத்து கரிஇந்துப்போடு பொடிசெய்து கொஞ்சம் எடுத்துவாயில்போட்டுக்கொண்டு கொஞ்சம் வென்னீர்மேலே சாப்பிடவும். (10) பெருங்காயத்தை ஜலத்தைவிட்டு அரைத்து கொஞ்சம் எடுத்து துணியிலோ அல்லது பஞ்சிலோ வைத்து தொப்பிளில் வைத்துக்கொள்ளவும் இப்படிசெய்தால் வயற்று ஒப்புலம் வாயுமுதலியவைகளைக் கண்டிக்கும் பெருங்காயத்தின் உபயோகத்தை பிறகு மூன்றுவது பாகத்தில் சொல்லுகிறேன்.

சிஷ்யன்:—சுக்கின் உபயோகங்கள் என்ன. குரு:—சிஷ்யா சுக்குசேராதமருந்து கிடையாது. முதலாவது (11) வயற்றுவலிக்கு, உஷ்ணம் வாயு முதலியவைகளுக்கு சுக்கைநன்றாகப்பொடிசெய்து அதின்சரிபங்கு சக்கரைசேர்த்து சாப்பிடவும். சாப்பிட்ட

3. கண்சம்மந்தமான பார்வை குறைவு, சாலேஸ்வரம், கண்குடைச்சல், கண்ணில் புரையுண்டாவது, கண்ணில் கோயுண்டாவது இம்மாதிரியானவைகையறுகள் யாவையும் உடனே சொஸ்தப்படும் 2—0—0.

N: B:—கமிஷன் ஏஜண்டு தேவை.



உடன் வெறுந்தண்ணீர் அல்லதுபால் சாப்பிடவும். உடனே கண்டிக்கும். இப்பொழுது சாவகாசம் கொஞ்சமாக இருப்பதனுல் பிறகு சொல்லுகிறேன். சிஷ்யன்:— இந்தபுஸ்தகம் 10வதுபக்கத்தில் பேய் என்று பொய்யாக ஆடுகிறவர்களுக்கு ஒரு கலிகம் சொன்னீர்களே. எல்லோரும் உங்களிடம்வரமுடியுமா வெளியூர் பேர்வழிகள் இருப்பார்கள். ஆகையால் அவர்களுக்கு தெரியும் பொருட்டு இப்பொழுது மருந்தோடுகூட சொல்லுங்கள். குரு:—சொல்லுகிறேன் பேய் என்பதே கிடையாது என்று சொல்லுகிவிருக்கிறேன். சும்மாவது ஆடுகோழிமுதலியவைகளை கொல்கிறார்கள். அதெல்லாம் சுத்தப்பிசகு மந்திரவாதிகள் தாங்கள் பிழைப்பதற்கு வேஷம்போடுகிறார்கள். அப்படி யாராவது மந்திரவாதி பேய் ஆடு கோழியைத்தின்பதைக்காட்டினால் அவர்களுக்கு ரூபா 250 கொடுக்கிறேன். ஆனால் ஒருவிஷயம் மனதில் வைக்கவேண்டும். பேய் என்பது காற்றில் சஞ்சாரம் செய்கிறதென்றும், ரூபமில்லையென்றும் சொல்லுகிறார்கள் அதற்கு பலியாக இருக்கிற ஆடு கோழி சாராயம் முதலியவற்றை அதுவாகதின்பதை காட்டவேணும். வேறு ஒருவர் ஆட்டையோ கோழியையோ வெட்டக்கூடாது. அதுவாகதின்றுவிட்டு எலும்பை எறியவேண்டும். வெட்டிக்கொடுத்தால் புத்தியில்லாமல் பேய்பிடித்தவர்கள் பிடியாதவர்கூட தின்பார்கள். அதில் ஒன்றுமில்லை. அந்தப்பேயேபோய்தின்பதாகக் காட்டவேணும். அப்படியார் என்னிடம் கட்டுகிறார்களோ அவர்களுக்கு 250 ரூபா கொடுக்கிறேன். நான்சொல்லுகிற கலிகத்தைப்போட்டால் பேய்க்குப் போய் இந்தக்கலிகம் பாதைப்படுத்தவேண்டும். எப்பொழுது பேய்பிடித்தவர்களுக்கு பாதைப்படுத்துகிறதோ அதிலிருந்து பேய் என்பதே இல்லையென்று நிச்சயமாய்சொல்லலாம். இக்கலிகம் ஒருகெடுதலும் செய்யாது. சும்மா உபயோகிக்கலாம். 12 பெருங்காயம் மிளகு வெள்ளைப்பூண்டு மூன்றையும் ஜலம்விட்டு மை

5, அஜீர்ணவாய்வு, மகோதர, மலபந்த, வயிற்றுநோய், கடுகடுப்பு ஜீர்ணமாகாமை இவைகளுக்கு 1—4—0,

N, B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

போல் அறைத்து கண்ணில்கொஞ்சம் போடவும். இந்தமு
சாமான்களையும் பொடிசெய்து மூக்கிப்பொடியோடு கலந்து
ஞ்சச்சொல்லவும். அல்லது (13)துளசிஇலை மிளகு இரண்டை
மைபோல் அரைத்து கண்ணில்போடலாம். மிகவும் பேய்உ
ரகமாக இருந்தால் பாதிகிராம்பு சேர்த்துஅரைத்துப்போட
பேய்பிடித்திருக்கிறவர்களுக்கு இது தெரியக்கூடாது. அப்
இந்த கலிகம் நான் சொல்லுகிறதுஇல்லை. வடமொழியில் அ
தஸாகரம் என்றபுஸ்தகத்தில் இருக்கிறது. சிஷ்யன்;—இதே
கூட விளக்குமார் செருப்பு தந்திரம்சொல்லுங்கள். குரு;—வா
தவந்தான். சுவாமி தயாநந்த ஸாஸ்வதி சத்தியாத் பிரகாசத்
சொல்லுகிறார் (14) பேய்பிடித்ததென்று ஆடுகிறவர்களுக்கு
ருப்பு விளக்குமார் முதலியவைகளால் 5 அடி அடித்தால்
ய்நிற்காது. அதுபோல் நாம்செய்தால் பேய்இருக்காது மறுப
யும் வந்தால் 11-நாளைக்கு விடியற்காலத்தில் விளக்குமார் பூ
செய்யவேண்டும். 15-சர்ப்பவிஷங்களுக்கு புறசம்பட்டை
கு (சமப்பங்கு) கொஞ்சம் கொண்டுவந்து ஜலம்விட்டு அம்மி
அரைத்து மெழுகுபோலாக்கி 5 ரு எடை எடுத்துக்கொண்
3-வேளைசாப்பிடவும். கருநாகப்பாம்புக்குகூட இந்த மருந்து
ணப்படுத்தும். (16)சிலபேருக்கு பல்லுக்கட்டிப்போனால் பூந்தி
கொட்டையைபொடிசெய்து அந்தப்பொடியினால் தேய்க்க
உடனேபல்திறக்கும். பிறகு மேல்சொன்ன மருந்து கடித்த ஒரு
ணிக்குள் கொடுக்கவேண்டும்.

சிஷ்யன்;—சுவாமி மஞ்சளின் உபயோகம் என்ன. குரு:
அப்பா மஞ்சள் வாயுவுக்கு மருந்து. சிலருக்குவாய்க்குள் வீக்க
எரிச்சல் பல்வலி முதலியவைகள் வருகின்றது. அவர்களுக்கு ஒ
மருந்துசொல்லுகிறேன். (17)மஞ்சளை எடுத்து நெருப்பில் கொ
சநேரம் வைத்துப்பிறகு எடுத்துபொடிசெய்யவேண்டும். வேப்ப
பட்டையும் உப்பு இரண்டும் சமபாகம் கொண்டுவந்து பொடி
ய்யவும் மிளகு 4 வில் 1-பாகம் எடுத்து அதையும் பொடிசெய்

6 வெள்ளை, மஞ்சள், இரத்தஒழுக்கல், உஷ்ணங்கள் 3—8—

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



சேர்க்கவும். இதை தினமும் பல்தேய்த்தால் பல்சோவு, பல்வலி
முதலிய வாயுவுகளைக் கண்டிக்கும் (18)ரம்பநாளாகக் காயாத
புண்ணுக்கு மேற்சொன்னபடி மஞ்சளைச்சுட்டு பொடிசெய்து
வஸ்திரகாயம் செய்யவும். மறுபடியும் வஸ்திரகாயம் செய்ததை
ப்பொடிசெய்து வஸ்திரகாயம் செய்யவும் இந்தமாதிரி 3-தடவை
செய்தால் மிகவும் பொடிப்பொடியாக ஆனவுடன் அந்தகாயத்
தில்நிறைத்து அமுக்கவும். இந்தமாதிரிசெய்தால் காய்ந்துவிடும்.
(19.) வீட்டுமெத்தையிலிருந்தோ அல்லது மரத்திலிருந்தோ கீழே
விழுந்து அடிபட்டதற்கு மஞ்சள் 1-ரூபாய் எடை எடுத்துபாலில்
போட்டுக் காய்ச்சி அந்தப்பாலை கொடுக்கவும். குணம்செய்கிறது
வலி ஒன்றும் இராது. (20)நாய்க்கடி எலிக்கடி பூனைக்கடி இத்தி
யாதிகளுக்கு சுண்ணாம்பு மஞ்சள், உப்பு இவைகளை கொஞ்
சம் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து அதை அந்தகடிவாயில்
வைத்து நன்றாய்த்தேய்க்கவும். மருந்துஉள்ளே போகவேண்டும்
இந்தமருந்து தேள்க்கடிக்கு சுகம்செய்யும். (பாம்புக்கு 15, 16
பார்க்க) மஞ்சளில் குணம் இன்னம் இருக்கிறது. இடம் இல்லாத
தினால் அடுத்தபாகத்தில் சொல்லுகிறேன் (21)ரோமசங்கரிதை
லம். இங்கிலீஷ்மருந்து. (Barium Sulphite) பேரியம் சல்பைட்
ரோமசங்காரிக்கு தண்ணீரில்போட்டு மேலேபோட்டால் மயிர்
கீழே விழுந்துவிடும். இந்தமருந்து கிடைக்காதபோனால் சுண்
ணாம்பு தாளகம் இரண்டையும் (சுண்ணாம்பு 1பாகமும், தாளகம்
இரண்டுபாகமும) ஜலம்விட்டு அரைத்துமேலே தடவவும். 5நிமிஷ
ம் கழித்து சுத்தம்செய்யவும். மயிர்விழுந்துவிடும் இது செய்து
எரிச்சல் இருந்தால்தேங்காய்எண்ணை தடவவும். சிஷன்:-சுவாமி
பித்தம் ஜாஸ்தியாக இருந்தால் அதை நீக்குவதற்கு ஒருமருந்து
சொல்லுங்கள். குரு—கொத்தமலி கண்டிக்கும். (22)அதற்குகொ
த்தமலியை வென்னீரில் போட்டு கஷாயம் செய்து அதில் கொஞ்
சம் பாலும் சக்கரையும்போட்டு காப்பி மாதிரி சாப்பிட்டால் பித்
தமயக்கம் கிறுகிறுப்பு முதலியவைகளைக் கண்டிக்கும்.

சிஷ்யன்—சுவாமி! சிலபேருக்கு ஓயாத தாகம் இருக்கிறது
எவ்வளவு தண்ணீர், சோடா லிமிநெட் முதலிய சாப்பிட்டாலும்
அடங்குவதில்லை அதற்கு ஒருமருந்து சொல்லுங்கள். குரு:-அப்
பா அடுத்தபாகத்தில் சொல்லுகிறேன். இப்பொழுது நேரமில்

7. மூக்கில் சிலந்தி, பீனிச மண்டைகுடைச்சல் இதர எல்லாவி
த சிரரோகங்களுக்கு. 4—0—0.

லை சிஷ்யன்;—சுவாமி சில்லரைவியாதிகளுக்கு மருந்து சொன்
னீர்கள். பெரியவியாதிகளுக்கு என்னசெய்கிறது. குரு:--அப்
பா என் கம்பெனியில் சகல வியாதிகளுக்கும் மருந்து கொடுத்து
நிவர்த்தி செய்யப்படும். அவர்கள் நேரில்வந்தால் பார்த்து மரு
ந்துகொடுக்கப்படும். ஒருதரம் மருந்துகொடுத்து சார்ஜ்வாங்கப்
படும். பிறகு கொடுக்கும் மருந்துகளுக்கு விலைகிடையாது. எல்
லாருக்கும் சௌக்கியத்திற்காக இதுசெய்கிறேன். அத்திமரத்தி
னால் உண்டாகும் பிரயோஜனங்கள். அத்திமரம் மிகப்பெரியது
இந்தமரம் பூவில்லாமல் காய்க்கும். இந்தமரத்தில் பால் உண்டு
இதற்கு சமுஸ்கிரதத்தில் கூலர் என்றும், பங்காளிபாஷையில் யக்
கட்டூமர் என்றும் மராட்டிபாஷையில் ஊம்பர்என்றும் பார்ஷீக
த்தில் அஞ்சீரேஆதம் அராபியில் ஜமீஜ்என்றும் ஆங்கிலேய பா
ஷையில் கிக்டிரீ, லாட்டினில் பைக்சாக்லோமேரீட்டா. இந்தமர
ம்மிகவும் சீதளமானது. அசதி, திரேகத்தில் வெடிப்பு பித்தம்.
ரக்தம்கெடுதல் இவைகளை நீக்குகிறது. இதைமேற்சொன்னவியா
திகளுக்கு உபயோகிக்கும்முறை. 23. சீதபேதிக்கு இலையை $\frac{1}{2}$
ரூபாய் எடை தண்ணீரைவிட்டு அரைத்து உள்ளுக்கு சாப்பிடவும்
24 வயிற்றில் அல்லது உடம்பில் எரிதல் இவைகளுக்கு அத்திமர
த்தின் பட்டையில் $1\frac{1}{2}$ தோலாவோடு 2 பலம் ஜலம்சேர்த்து சாப்
பிடவும் 25 ஒருநாளைக்கு 5 அல்லது ஆறுதடவை வெளியேபோ
கிறதற்கு அத்திக்காயை சாப்பிட்டுவிட்டு மேலேமோர் சாப்பிட
வும் 29 குழந்தைகளுக்கு பச்சையாகவும், மற்றவவிதமாவது
சும்மாவெளியேபோனால் அத்திப்பால் $\frac{1}{12}$ ரூ எடையில் கொஞ்சம்
சக்கரைபோட்டு கொடுக்கவும் 27 அர்த்தாங்கரோகத்திற்கு (அர்
த்தாங்கரோகமாவது வலதுகால், வலதுகை, வலதுதொடை முத
லியவை அல்லது இடதுகை, இடதுதொடை, இடதுகால் முதலிய
வைகளில் எப்போதும் வலித்துக்கொண்டு இருப்பதற்கு) அத்திப்
பாலை எடுத்து வலிக்கிற இடத்தில் தடவவும் 28, 29, 30, 31 இந்
திரியத்தில் வீக்கம் வெட்டை, கைகால் எரிச்சல், தாகம் ஜாஸ்தி
இவைகளுக்கு, அத்திக்காயின் காம்பு $\frac{1}{2}$ரூ எடை மிளகு $\frac{1}{8}$ரூ எடை

8 • பல்லுரோவு. பல்லில் இரத்த சீவு வடிதல், ஈரு வளருதல்
வாய்நாற்ற. இம்மாதிரியான யாவற்று வகையருவுக்கு அவிழ்தம்
கொடுக்கப்படும். 0—4—0.

N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



தண்ணீர் $6\frac{1}{2}$-ரூ எடைசேர்த்து அரைத்து உள்ளுக்கு சாப்பிட
வும். இது பசியை உண்டுபண்ணும். 32, 33 கட்டி, அரையாப்
புக்கட்டி முதலியவைகளுக்கு உவர்மண்ணோடு அத்திப்பாலைக்க
லந்து கடிதாசியில்தடவி கட்டிமேல் ஒட்டிவைக்கவும். 34. வெள்
ளைவியாதி அல்லது வெட்டைக்கு—அத்திப்பழம்சாப்பிட்டு கோ
ஞ்சம இக்துப்புராப்பிடவும். 35 சும்மா மாஸப்ரவேசமாகிறவர்
கள் அத்திப்பட்டை $2\frac{1}{2}$-ரு எடை $\frac{1}{8}$-சேர் ஜலம் சேர்த்து அரை
த்து சாப்பிட்டால் சுகம்தரும். 36 கர்ப்பம் இல்லாதவர்களுக்கு
அத்திக்கட்டையை மைதாமாவுபோல் பொடிசெய்து கோதுமை
மாவுசேர்த்து நெய்யில் வரியன்பண்ணி சாப்பிடவும். 37. மூக்
கில் சிலசமயங்களில் இரத்தம்வருவதற்கு அத்திப்பழத்தை சாப்
பிட்டால் இதை நிறுத்தும். என் அற்பபுத்தியினால் இந்த அத்தி
மரத்தின் குணங்களில் சிலதுசொன்னேன். இதைநான் அநுபோ
கத்தில் செய்துபார்த்திருக்கிறேன். இதைப்போல் நீங்கள் வீட்
டில்செய்து லாபமடையுங்கள். வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்
களுக்கு மருந்து தயார்செய்துகொடுத்து தர்மஞ்செய்த பலனை
அடையுங்கள். இதனால் எனக்கும் கௌரவத்தைக்கொடுங்கள்
சிஷ்யன்;—சுவாமியே. அத்திமரம் மிகவும் உபயோகமானதுஎன்
றுதங்களால்தான் தெரிந்துகொண்டேன். இன்னம் வேறே ஒரு
மரத்தின்குணங்கள் சொல்லுங்கள். குரு;—அப்பா இப்பொழு
து சாவகாசமில்லை. மற்றமரங்களின் உபயோகத்தை அடுத்தபா
கத்தில் சொல்லுகிறேன். சிஷ்யன்:—சுவாமியே ஒருவன் வீட்
டிலிருக்கையில தேளோ அல்லது பாம்போ கடித்தால் மருந்து
கொடுக்கலாம். வெளியேஒரு வயல் காட்டுவழியே வரும்போது
தேளோ அல்லது பாம்போ கடித்தால் என்னசெய்கிறது? அதற்
கேற்றமந்திரம் சொல்லுங்கள். குரு:—அப்பா இப்பொழுது
புஸ்தகம் முடியப்போகிறது. ஆனாலும் இது அத்யாவச்யமாகை
யால் இப்பொழுது சொல்லுகிறேன் கேள். மந்திரம் என்பது
என்ன? வாக்கு சக்திமந்திரம் நாம் சொல்லுகிற வார்த்தையி

சுடாதவாதக் குரணம் 0—6—0
N. B.—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

னால் ஒரு காரியத்தை செய்ய நினைத்தால் உடனே அது பூர்ணமாகிறது. இதேமாதிரியாய் ஒவ்வொரு சப்தமும் மந்திரமாகிறது நல்லவார்த்தையில் எல்லாருக்கும் பிரீதியிருக்கிறது. ஆகையினால் இது நல்லமந்திரம். கெட்டவார்த்தை சொன்னால் அது கெடுதல்கொண்டுவருகிறது. ஆகையினால் அது கெடுதல்மந்திரம். நான் ஒருமனிதனை வாருங்கள் என்றால், முதலில் வருகிறதில்லை. பிறகு வாருங்கள் வாருங்கள் என்று கூப்பிட்டபிறகு வருகிறார். காரணம் என்ன நாம் சொன்னவார்த்தையின் பலன், ஆகையினால் இதுவும் ஒரு மந்திரம்.

ஒருகுழந்தையை.இங்கே வாஎன்றால் முதலில் வருகிறதில்லை பிறகு கையில் ஏதாவது தின்பண்டம் வைத்துக்கொண்டு மறுபடியும் மறுபடியும் கூப்பிட்டால் தானாகவே தாய்தகப்பனைவிட்டு வந்துவிடுகிறது. காரணம் என்னவென்றால் நம் மந்திரத்தின்காரியம்தான். இந்தக்காலத்து ஜனங்கள் சமுஸ்கிரதத்தில் சொல்லிவிட்டால் அது மந்திரம்என்றும் தமிழில்சொன்னால் பொய்என்கிறார்கள். உதாரணத்திற்காக ஒரு சமுஸ்கிரதமந்திரமும் அதன் அர்த்தமும் சொல்லுகிறோம். நீங்கள் சரிதானா! என்றுபாருங்கள்:—. தேள்கடிக்கு மந்திரம். பௌர்ணமைதினம் மனிதசஞ்சாரமில்லாத இடத்தில் நடுநசியில்போய் 21-கொடிமுந்திரிப்பழம் வைத்துக்கொண்டு பின் சொன்ன மந்திரத்தை 7-தடவை அதின்மேல் ஊதவும். மந்திரம். ஓம் விச்சுக விஷதாரோ, ஆராம்பர் பூரோகோ ஹனுமானுக்கிலகே தவகாய் விஷ்கோ காயகாலகாமாயி ஜாரே ஜாரே, விஷஜல்திலே உடஜா, அர்த்தம் ஓம் தேளின் விஷம் தூரமாகவேணும். இவருக்கு நல்லசுகம்வேணும் இதன் விஷம் அநுமான்மேல் சத்யம். இந்தவிஷத்தை காளிசாப்பிட்டுவிடவேணும். போ. போ. விஷம் சீக்கிரத்தில் போகவேணும். ஜனங்களுக்கு சமுஸ்கிரதத்தில் சொன்னால் மந்திரம்என்று எடுக்கிறார்கள். சமுஸ்கிரதம் தெரியாதவர்கள் அர்த்தத்தை பாடம்செய்யலாம். மேலே சொன்ன கொடிமுந்திரிப்பழத்தை

காசம் அண்டவாய்வு முதலானவைகளுக்கு, ரு 0—6—0.
N. B.—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



ஒரு சாதுவுக்கு சாப்பிடுவதற்காகக் கொடுக்கவேணும். இப்படி செய்தால் மந்திரம் சித்தியாகிறது. சிகப்பு நீக்குர்சியை எடுத்து கடிவாயில் தேய்க்கவும் தேய்க்கும்போது இந்த மந்திரமாவது அல்லது அவர் அவர்கள் குலதெய்வத்தின் பெயரைச்சொல்லி அவர்மேல் ஊதவும். இப்படிச்செய்தால் விஷம் இறங்கும். மந்திரம் 101-தடவை சொல்லுமளவும் தேய்க்கவேண்டியது. சொஸ்தமானவர் செவ்வாய்க்கிழமை குரங்குக்கு கடலைபோடவும்.

2. சர்ப்பத்திற்கு மந்திரம். சர்ப்பம் கடித்தால் கொஞ்சம் மேலும் கீழும் இறுக்கிக் கட்டவேணும். பிறகு வாழைச்சார் கொண்டுவந்து பின்சொன்ன மந்திரத்தை ஏழுதடவை மனதுக்குள்சொல்லி அதின்மேல் ஊதி உள்ளுக்கு சாப்பிடக்கொடுக்கவும். கடிவாயில் வாழைச்சாரை ஊற்றி மந்திரத்தை 1000-தடவை ஜபிக்கவேண்டும். ஈசுவரகிருபையினால் தானே பிழைப்பான். பிறகு ஐந்து அனாதைகளுக்கு சாப்பாடுபோடவும். மந்திரம் ஓம் சர்ப்பவிஷ நஷ்டஹோரோகி ஹிருஷ்ட பிரஷ்டஹோரகனைய்யா நாகனாதேகா ஷபர்கானா கசேகா. சேஷநாகிக்கி மச்சேதுவகாயி லக்ஷ்மணசக்திசரே ஸஹாயி பம் பம் விஷ ஹார் அர்த்தம். சர்ப்பவிஷம் நாசமாகவேணும். ரோகி நல்லபலமாக ஆகவேணும். கிருஷ்ணபகவான் காளி நாகத்தின்மேல் நர்த்தனம் செய்திருக்கிறார். ஆதிசேஷ நாகத்திற்கு நான் சத்தியம் செய்கிறேன், லக்ஷ்மணசக்தியின்பிரபாவத்தைக்கொஞ்சம் வேண்டுகிறேன். பம் பம் விஷம்போ. 3 குழந்தைகளுக்கு திருஷ்டி முதலியவைகளுக்கு மந்திரம் யாராவது ஒருவர் காலைவேளையிலும் (சூரியனுக்குமுன்) சாயங்காலவேளையிலும் வேப்பிலை கையில் வைத்துக்கொண்டோ அல்லது ஜலம்வைத்துக்கொண்டோ ஜபம்செய்யவேணும். மந்திரம். ஓம் ஸத்ரன்ய சங்கர் பாலரக்ஷகாய நம: அர்த்தம். ஓம் ஹே மஹேஸ்வர நீங்கள் எழுந்து குழந்தையை ரக்ஷைசெய்யுங்கள். 4. ஒற்றைத்தலைவலிக்கு மந்திரம். கட்டைவிரலினாலும்மோதிர விரலினாலும் பொட்டை எந்த

மலசுத்திமாத்திரை 0—12—0 மஞ்சர் அய்டிஸ் 0—14—0
N. E:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை,

ப்பக்கம் வலிக்கிறதோ அந்தப்பக்கம் மோதிர விரலை வைத்துக்கொண்டு பிறகு ஊதிவிடவும். கீழ் சொல்லியிருக்கிற மந்திரத்தை 21-தட்வை ஜபிக்கவும், ஓம். ஆதாசீஷீ பிடாஜாய். குருகோரக்ஷீரகாய். அர்த்தம். நோவு இருக்கிறது போகவேணும் குருகோரக் என்ற ஸாதுக்கு இதுதான்மிட்டாய் 38 ஒற்றைத்தலைவலிக்கு மருந்து எள்ளு பாலில் அரைத்து சூரியனுக்கு முன் பொட்டில் போட்டு அனல்காட்டவும், இந்தமாதிரி 3 நாள்செய்யவும். 5. தலைவலிக்கு மந்திரம். ஆள் காட்டிவிரல் கட்டைவிரலினால் பொட்டைப் பிடித்துக்கொண்டு குலதெய்வம்பெயர்சொல்லி உருவவும். 21-தடவைசெய்யவும். பிறகு கொஞ்சம் சௌக்யம் இல்லாதபோனால் இன்னம் 21-தடவைசெய்யவும் 6. பைத்யம்பிடித்த நாய்கடிக்கு மந்திரம். பாம்புபுத்துமண்கொண்டுவந்து கோலி அத்தனை பெரிது 7-உருண்டை தயார்செய்யவும் ஒருஉருண்டை எடுத்து கடிவாயின்மேல் பின்வரும் மந்திரத்தை சொல்லிக்கொண்டு 7-கோலியைத்தேய்க்கவும். தேய்க்கும்போது நாயின் மயிரின்மாதிரி நுரை வெளியேவரும், மந்திரம் ஓம் சாந்தாரீஸ்வாகா. இந்த ஆறு மந்திரங்களிலும் ஓம் சொல்லவேண்டியது. ஓம் என்பதற்கு அர்த்தம் பஞ்சரத்தினம் முதல்பாகத்திலும் ஆர்ய வைதீக ஸந்தியாவிலும் பார்க்கலாம். வேண்டுமென்பவர்கள் எம். ஜே. ஷர்மா அன்கோ, மதுரை. என்று எழுதிபெற்றுக்கொள்ளலாம். சிஷ்யா. மந்திரம் இன்னம் ஜாஸ்தியிருக்கிறது. பிறகு 3-வது பாகத்தில் சொல்லுகிறேன். பாபு கங்காபிரசாத் புஸ்தகங்களிலிருந்த சமாசாரங்கள் ஜனங்களின் உபயோகத்திற்காக இந்த பஞ்சரத்தினத்தில் எழுதியிருக்கிறேன். அதற்காக அவருக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

## மெஸ்மெரிச கண்ணாடி.

சிஷ்யன்:—சுவாமியே முதல்பாகத்தில் மெஸ்மெரிச மோதிரம் சொல்லியிருக்கிறீர்கள். இப்பொழுது மெஸ்மெரிஸம் கண்ணாடி சொல்லுங்கள். குரு;—சொல்லுகிறேன். கேள்.

எல்லாவித வாய்வுகளுக்கு அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும்படியான ஔஷதங்களுக்கு 1—8—0
N. B:—கமிஷன் ஏஜண்டு தேவை



மெஸ்மெரிசம் கண்ணாடி என்பது முகம்பார்க்கும் கண்ணாடி இதுசக்ரமாக இருக்கும் ஆங்கிலேயபாஷையில் கிரிஸ்டல்கிளாஸ் [ Crystal glass ] என்றுபெயர் ஏறக்குறைய ¾-இஞ்சகனமிருக்கும். இங்கிலாண்டு அமெரிக்கா முதலிய தேசங்களில் இந்தமாதிரி கண்ணாடி தயார்செய்து ஆச்சரியமான கண்ணாடியென்றும் அபூர்வமான கண்ணாடியென்றும் அதிகவிலைக்கு விற்கிறார்கள். இதற்கு சித்திக்கண்ணாடி என்றும் பெயர். முன்காலத்தில் ஜாமஜம்ஷேத் என்ற பாதுஷா ஒருகண்ணாடிக்கிண்ணம் வைத்திருந்தார். அவர் அதில் தண்ணீர்போட்டுவிட்டு பார்ப்பதுவழக்கம் அப்படி பார்த்தால் உலகத்தில் நடக்கும் சங்கதிகள் தெரியுமாம் அந்த சமயம் அவருக்கு யோக தத்துவங்கள் தெரியுமாம். அதில் ஆகர்ஷணசக்தி உண்டாகிறது. இதேமாதிரி ஒருமனிதன் மெஸ்மெரிஸம் முதல்பாகத்தில் சொன்னபடி சித்திசெய்தபிறகு இது செய்தால் அவனுக்கும் எல்லாம்தெரியும் மேற்சொன்ன வட்டமான கண்ணாடியை அவன் உற்றுப்பார்ப்பதனால் மயக்கம்வரும் அப்பொழுது கட்டுப்பட்டு இருந்த ஜீவாத்மா உலகம் முழுவதும் சுற்றுகிறது, அதனால் அவனுக்கு எல்லாம் தெரிகிறது. இதுமாதிரியாகவே இந்த பாதுஷா செய்துவந்தார்.

தண்ணீருக்குள்ளாக ஆகர்ஷணசக்திபோகிறது. ஆகையினால் அவனுக்கு உலகநடவடிக்கைகள் தெரிகிறதில்லை. ஆனால் அவன் தூங்குகிறதுமில்லை. நேத்ரம் மூடியிருக்காது. மெஸ்மெரிசம் யோகாப்யாசம் தெரிந்தவர்களுக்கு இது சீக்கிரம்வரும் இதற்கு கெட்டிக்கண்ணாடிவேணும் மற்றொன்றும் கூடாது. நேத்திரம் ஒரேநிதானமாக ஆனதும் மனது ஒருநிலையாகிறது. ஜீவாத்மா மனதோடு சேர்கிறது. நாம் எதைநினைத்துக்கொண்டு இதை செய்கிறோமோ அது தெரியும். பார்க்கும் சமயம் வேறுயாராவது கேள்விகள் கேட்டால் அதற்கும் பார்க்கிறவர் பதில் சொல்லலாம். இந்தக்கண்ணாடிக்கு வட்டம் பிரமாணம் இல்லை. எவ்வளவுபெரிதாக இருந்தாலும் இருக்கலாம்.

வெள்ளை, மஞ்சள், இரத்தஒழுக்கல், உஷ்ணங்கள் 3—8—0
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

## பஞ்சமகா யக்ஞவிதி பாகம் 1.

நான் பஞ்சமகாயக்ஞவிதி பஞ்சரத்தினம் முதல்பாகத்தில் ஆரம்பித்து இருக்கிறேன்., இப்பொழுது ஒவ்வொரு வேதமந்திரங்களைச்சொல்லி அர்த்தம் சொல்லுகிறேன்.

### ஆசமனமந்திரம்.

ஓம் சன்னோதேவிரபிஷ்டையே ஆபோபவந்து பிதையே. சம்யோரபிஸ்ரவந்துனஹ: (யஜுர்வேதம்அத்தி 36 மந்திரம் 12. மகரிஷிசுவாமி தயாநந்த சரஸ்வதி பாஷ்யம்)

அர்த்தம். இது சன்னோதேவிஇத்யாதிக்கு அர்த்தம் இதுதான். ஆப்லூரி வியாப்தெளவினுல் அபசப்தம் சித்தியாகிறது. இது எப்பொழுதும் ஸ்ரீலிங்கம் பகுவாசனமாக இருக்கிறது, தீவுதாதுக்கு அர்த்தம் விளையாடுகிறது. இதுனல் தேவிசப்தம் சித்தியாகிறது. (தேவ்ய ஆபத)-எல்லாருக்கும் பிரகாசம் கொடுக்கிறவர் எல்லாருக்கு ஆனந்தம் கொடுக்கிறவர் இவர் சர்வவியாபகர் ஈசுவரர். (அபிஷ்டையே)-மனதில் நினைக்கிற காரியங்களை (பீதையே) பூரணமும் ஆனந்தமும்கொடுக்கக்கூடியவர். (ந) எனக்கு [சம்] சுகமாக இருக்கும்படி [பவந்து] செய்கிறவர். ஈசுவரர்- [சம்பவந்து] எனக்கு சுகம்கொடுங்கள். [த\ஆபோதேவ்ய] அதுதான் பரமேஸ்வரர். [ந] எங்களுக்கு [சம்யோ] சுகத்தை [அபிஸ்ரவந்து] எல்லாஇடத்திலும் கொடுக்கவேணும்.

இந்தமாதிரி இந்தமந்திரத்தினுலேபரமேஸ்வரனை தியானித்துக்கொண்டு மூன்றுதடவை ஆசமனம் செய்யவேண்டியது. ஜலம் இல்லாதபோனுல் மந்திரத்தைமட்டும்செய்யலாம் விஷயம் என்னவென்றல்சாயங்காலத்தில் அல்லது விடியக்காலத்தில் தவருமல் சந்தியாசெய்யவேண்டியது என்பதுதான் ஆசமனம் எதற்காக ஆசமனம் தொண்டையில் கபம் இருந்தால் நீக்குவதற்கும், ஆசமனம்செய்தால் பின்னுல் வருகிற மந்திரங்களை சொல்லுகிறதற்கு ஹேதுவும் உண்டாகிறது. அபஎன்பது ஈசுவரனுக்கு பெயர். இதற்கு ஆதாரம்.

யத்ரலோகம்ச்ச கோசாம்ச்சாபோ பிர்ம்மஜனுவிது அஸச்சயத்ர சஞ்சஞ்சாம்தஸ்கம்பம் தம், ப்ரூஹி, கதமஹஸ்விதேவஸ:ll [அதர்வவேதம் காண்டம்10. அனுவாக 4 வர்க்கம்22 மந்திரம் 10]

சின்ன• குழந்தைகளுக்கு உண்டாகும் சகல வியாதிகளுட நீக்கக்கூடிய மருந்து கிரயம் ரூ, 2—8—0
N. B:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.



அர்த்தம், (யத்ரலோகம்ச) அதில் சர்வலோகமும், லோகாந்தரமும் இருக்கிறது. (கோசா) காரணரூபமான கஜனு அதில் அவரின் ஸ்ருஷ்டிகள் இருக்கின்ன. ரூபமில்லாமலும், ஆகாசம்போலவும், ஸ்தூலம் பிரகிருதி இத்யாதி மேற்சொன்ன கஜஈனுவில்இருக்கிறன. இதற்கு பெயர் அப என்பது. அப என்பதற்கு பிரம்மம் என்றும்பெயர் இந்த அப என்பதற்கு ஸ்கம்பம் என்றும்பெயர் அப்பேர்ப்பட்ட ஸ்கம்பர் யார். பிரம்மய்யார். அவர் எங்கே இருக்கிறர். (அந்தக அவர் எல்லோரிடத்திலும் வியாபித்து இருக்கிறர். அவர் எல்லோரிடத்திலும் பரிபூரணமாக இருக்கிறர். அவரை நீங்கள் பூஜை செய்யுங்கள். அவர்தான் உங்கள் இஷ்டதேவதை. இதற்கு ஆதாரம் ஹிந்துக்களுக்கு முக்கியமான வேதமந்திரம்தான். அவர்தான் பிரம்மம். ஸ்கம்பம்

(பாக்கி அடுத்தபாகத்தில் சொல்லுகிறேம்.)

இதைவாசிக்கும் நேயர்களே. நான் வடக்குதேசத்து மனிதன் எனக்கு தமிழ் நன்றாகபேசக்கூடத்தெரியாது. ஆகையினுல்நான் வேறே ஒருவரை வைத்து எழுதவேண்டியதாயிற்று தப்பு இருந்தால் மன்னிக்கும்படி வேண்டுகிறேன். இதையும் என்னையும் பிழைகளை நீக்கி நல்லவிஷயங்களை கிரஹித்துக்கொண்டு கௌரவிக்கும்படி வேண்டுகிறேன்.

M. J. Sharma, Madura.

### பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 4 | ஜீவித்த | ஜீவித்து |
| 7 | 14 | மே 1—17 | மே 11—17 |
| 17 | 18 | ஜகத்திற்கும | ஜகத்திற்கும் |
| 21 | 25 | சோபைபபையனுக்கு | சோபைப்பையனுக்கு |
| 28 | 13 | சொலுகிறேன் | சொல்லுகிறேன் |
| 28 | 21 | பெருங்காயத் | பெருங்காயத்தை |
| 29 | 1 | வும | — |
| 30 | 19 | (16) | (16) பாம்புகடித்து |
| 32 | 20 | — | சேர்த்து அரைத்து |
| 32 | 27 | வலதுகால் | இடதுகால் |

எங்கள் ஆபீஸ் மேன்கார்டேப்பொட்டலுக்கு சமீபம் பிள்ளையார்கோவிலுக்கு எதிரில் எம் ஜே. ஷர்மா அன்கோ, இருக்கிறது

மூல குடிக்கு ரூ 3—4—0 பல்வலிதைலம் 0—10—0
N. B.:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

### ரக்தசோதக்டானிக்.

இந்த ஆச்சரியமான டானிக் இருமல் வீர்ய நஷ்டம் முதலியவைகளுக்கு சௌக்யம்செய்கிறது தேகத்திற்கு பலத்தைக் கொடுக்கிறது இது மிகவும் சுத்தமானது இது வீரம் பூரம் முதலியவை சேர்ந்ததல்ல. வாங்கிப்பார்த்தால் குணம் தெரியும். 5-அவுன்ஸ் புட்டி1-க்கு ரூ 0 12.0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்

### ஆர்யவைதிக ஸந்தியாவந்தனம்

இந்த சந்தியாவந்தனமானது வேதத்திலிருந்து ஸ்தோத்திரங்கள் எடுத்து தொகுத்து எழுதப்பட்டது அந்தந்த ஸ்லோகம் தமிழில் விரிவாக எழுதப்பட்டது காயத்திரிமந்திரம் பிராணயாமமந்திரம் இவைகளுக்கு அர்த்தம் விஸ்தாரமாக எழுதப்பட்டு இருக்கிறது விலை 0.4-0 போஸ்டேஜ் பிரத்தியேகம்

### பஞ்சரத்தினம் மூன்றாவதுபாகம்

இதில் அனேகம் வியாதிகளுக்கு மருந்து, மெஸ்மெரிஸம், யோகவித்யா, ஜாலவேடிக்கை, நம் சரீர அமைப்பு இன்னும் அனேக விஷயங்களும் எழுதப்படும் இன்னம் கொஞ்சகாலில் வெளிவரும் மெம்பராகசேருபவர்கள் இப்பொழுது 3-அணா கொடுத்து சேரலாம் அச்சடித்த உடன் அனுப்பப்படும்

### மாம்சம் சாப்பிடுவதினால் உண்டாகும்கெடுதல்கள்

இந்தச்சிறுபுஸ்தகத்தில் மாம்சம் சாப்பிடுவதினால் உண்டாகும் கெடுதல்கள், வேதாதி சாஸ்திரங்களிலிருந்து ஸ்லோகங்களுடன் தமிழில் எழுதப்பெற்றது அஹிம்சா பரமோதர்ம: என்பதுபற்றி எழுதப்பட்டது விலை 0—0—6

### ராணி துர்காவதி

வீரசரித்ராவளி மலர்1

இப்பெயர்பூண்ட புஸ்தகமானது இதுவரையில் தமிழில் வெளிவராதது இதில் ராணி துர்காவதியின் பெருமையும் அவள் தன்பிள்ளையை எப்படி வளர்த்தாள் என்றும் அவள் எப்படி துலுக்கர் ஸைன்யத்தோடு அக்பர் காலத்தில் யுத்தம் செய்திருக்கிறாள் என்றும் விரிவாகவும் அரிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. கூடியசிக்கிரம் வரும் விலை 0-0-9 தபால்செலவு பிரத்தியேகம்

வீரசரித்ராவளி மலர்கள் கொஞ்சகாலத்துக்குள் வெளியிடப்படும் முக்கியமான வீரர்கள் வீரமணிகளின் சரித்ரம் எழுதப்படும் மகாராணா பிரதாப்சிங் மகாராஜா பிருதிவிராஜ் ராஜ்குமார் சண்டு ஸிவாஜி முதலிய வீரர்களின் சரித்திரமும், ஜவாஹர்பாய் வீரதாத்ரி பன்னா, வீரபாலா ... வீராகாரி, கர்மதேவி முதலிய வீரமணிகளின் திவ்யசரித்திரமும் எழுதப்படும்

M. J. Sharma & Co,
MADURA.

17895

### அடியில் விவரிக்கப்பட்ட வியாதிகளை கஷ்டநிவாரண ஆரியமாத்திரையே கண்டிக்கும்.

| | |
|---|---|
| 1 பல்லைப்பற்றிய சகலவியாதிகளுக்கு | 14 பாண்டுரோகத்திற்கு |
| 2 சிரங்குகளுக்கு | 15 விரைவாதத்திற்கு |
| 3 இந்திரிய நஷ்டத்திற்கு | 16 காமாலைக்கு |
| 4 ஸ்திரீயால் நேர்ந்தவெள்ளை வியாதிக்கு | 17 வயிற்றினுள் கட்டிகளுக்கு |
| 5 கண் நோய்களுக்கு | 18 அரையாப்பு கட்டிகளுக்கு |
| 6 சாது நோய்களுக்கு | 19 கள்ளிப்பு கிரந்திக்கு |
| 7 மூக்கைப்பற்றிய பீனஸத்துக்கு | 20 கைகால் பிடிப்பு |
| 8 பவந்திரத்திற்கு | 21 மார் நோவுக்கு |
| 9 நீர் அடைப்பிற்கு | 22 வயிற்றுவலிகளுக்கு |
| 10 பேய் பிசாசுக்கு | 23 கைகால் குடைச்சலுக்கு |
| 11 மலபாதை சிக்கலுக்கு | 24 மண்டை கரப்பானுக்கு |
| 12 வாந்தி பேதிக்கு | 25 தேள்கொட்டிற்கு |
| 13 சகல ஜுரத்திற்கு | 26 ஸ்திரீகள் மாதப்பிறவேசமகாதவர்களுக்கு |
| | 27 குழந்தையில்லாதவர்களுக்கு |

1. இக்கஷ்டநிவாரண ஆரிய மாத்திரையானது யோகீஸ்வரர்களால் கண்டுபிடித்து அனுபவத்தில் நல்ல குணத்தைத்தரக் கூடியதும் மலையடிவாரங்களிலுள்ள மூலிகைகள் என்னும் பச்சிலையால் செய்யப்பட்டது மற்ற மருந்துகளைப்போல் வீரம், பூரம், ரஸம் கந்தம் பாஷாணம் முதலியதுகளால் செய்ததல்ல சிறுவர் முதல் விருத்தர் வரையில் பயமின்றி சாப்பிடலாம் வாய் பிடிக்காது பல் போகாது.

2. நமமருந்தைப்பற்றி அதிகமாய் நான் புகழ்ந்து பேசவேண்டியதில்லை. ஒருதடவை வாங்கி சாப்பிட்டால் அதின் குணம் நீங்களே நன்றாய் தெரிந்துகொள்வீர்கள் மாத்திரை வாங்குபவர்களுக்கு அனுபான லிஸ்டு அனுப்பப்படும்.

42-மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு ரூ 2—4—0

நம் மாத்திரைகள் சாப்பிட்டு வியாதிகள் குணமானதற்கு அநேக கனதனவான்கள் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்கமெடல்களும் அனேகம் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் பில்லி சூன்யம் பேய் பிசாசும் ஓட்டப்படும். இன்னு எவ்வித வியாதியாயிருப்பினும் கவனித்து கூடிய சீக்கிர குணம் செய்யப்படும். பாரிசவாய்வு குஷ்டரோகம், காக்காவலிப்பு, பயித்தியம் முதலிய கொடிய ரோகங்களையும் சௌக்யம் செய்யப்படும்.

எம்.ஜே ஷர்மா அண்டு கோ, மேங்காட்டுப்பொட்டல் ம